Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
- வங்கிக்கணக்கு அவசியமில்லை
- கமிஷன் ஏதுமில்லை
- 365 நாட்களிலும் எந்நேரத்திலும்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk

சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 16 (07.05.2004) வெள்ளிக்கிழமை இதழ்:218

# இஸ்ரேலிய ஆயுதங்களை கொள்வனவு செய்ய இடைத்தரகர்கள் மூலமாக இலங்கை முயற்சி!

## முன்னாள் அமைச்சர் மீது விசாரணை

(டெல் அவிவ்)



ஆயுதக் கொள்வனவில் சம்பந்தப்பட்ட செகவ்

**முன்னாள் இஸ்ரேலிய அமைச்சர் ஒருவர் ஊடாக குறைந்த விலையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாக - இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு நேற்று உறுதிசெய்ததுடன், இது குறித்து விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் அறிவித்துள்ளது.**

**இது தொடர்பாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிருகையில் -**

முன்னாள் இஸ்ரேலிய அமைச்சர் கொனென்சிகவ் ஊடாகவே இஸ்ரேலில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுத தளபாடங்களைப் பெறுவதற்கு இலங்கை இராணுவம் முயற்சித்து வருகிறது. குறைந்த விலைக்கு இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திலேயே இவரை இலங்கை இராணுவம் அணுகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான இலங்கைக்குழுவிற்குத் தன்னைத் தலைமை தாங்க அனுமதித்தால் இஸ்ரேலிடமிருந்த ஆயுதங்களை மாத்திரமன்றி இஸ்ரேலிய உதவிகளையும் பெற்றுத் தருவதாக கொனென் செகவ் இலங்கைக் குழுவுக்கு உறுதியளித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் என்ற செல்வாக்கைப் பயன்படுத்தி தம்மால் புலிகள் தொடர்பான அச்சுறுத்தலை அடக்குவதற்கான இஸ்ரேலிய உதவியையும் பெற்றுத் தருவதாக இவர் உறுதியளித்துள்ளார்.

ஆனால், இலங்கைக்கு ஆயுதங்களை விற்பதற்காக கொனென் சொகெவ்வின் செயற்பாடுகள் குறித்து ரெல் அவிவ்வில் உள்ள இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சு எச்சரித்ததுடன் பாதுகாப்புச் சாதனங்களை ஏற்றுமதி செய்வதற்கான திணைக்களத்தின் தலைவரான யொஷி பென் ஹனானும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவரது நடவடிக்கைகள் சட்டத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் சூடு இரு புலிகள் மரணம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தன்னாமுனைப் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு விடுதலைப் புலிப் போராளிகள் உயிரிழந்தனர்.

நேற்றுப் பகல் 1.00 மணியளவில் நடந்த இச்சம்பவத்தில் மட்டக்களப்பு நொச்சிமுனையைச் சேர்ந்த பகலவன் என அழைக்கப்படும் - சிவநாதன் சிறி முரளி, கிளிநொச்சியைச் சேர்ந்த நிதர்சன் ஆகிய இரண்டு போராளிகளுமே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி இரு போராளிகளும், செங்கலடியிலிருந்து மட்டக்களப்பு நகரத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தனர். இவர்கள் தன்னாமுனைப் பிரதான வீதியை அண்மித்தவேளை- இனந்தெரியாதவர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதன் பின் இருவரது சடலங்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் ஊடாகவே நிதியுதவிகள் வழங்கப்பட வேண்டும்!

### ஐரோப்பிய ஒன்றியத்திடம் கூட்டமைப்பு வலியுறுத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வின் அடிப்படை

பரராஜசிங்கம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதில் நிதி வழங்கும் நாடுகள் முன்னுரிமை தரவேண்டும். அதேவேளை, அந்த நிதிகள் வடக்கு - கிழக்கின் இடைக்கால தன்னாட்சி அமைப்பு ஒன்று உடனடியாக அமைக்கப்பட்டு அதனூடாக

கான நிதிகள் நேரடியாக அந்தப் பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுவதை ஐரோப்பிய ஒன்றியம் உறுதிப்படுத்தவேண்டும். போன்ற கோரிக்கைகளும் இந்தச் சந்திப் பின்போது முன்வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி வெளடர் வில்டனும், நெதர்லாந்து

## மட்டு – களுவன்கேணியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவன்கேணிப் பகுதியில், நேற்று முனதினம் இரவு இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்புக்கு வடக்கே 18 கிலோமீற்றர் தொலைவில் உள்ள

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் களுவன்கேணிப் பகுதியில், நேற்று முனதினம் இரவு இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்புக்கு வடக்கே 18 கிலோமீற்றர் தொலைவில் உள்ள களுவன்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - மூன்று பிள்ளைகளின் தந்தையான கனகசூரியம் (வயது 45) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் எனத் தெரியவருகிறது.

வீட்டில் இருந்தபோது சுடப்பட்ட இவர் செங்கலடி ப.நோ.கூ. சங்கத்தில் பணியாற்றிவந்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் கொழும்பு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வின் அடிப்படையிலேயே தென்னிலங்கைக்கான நிதியுதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் நாடுகள் முன்னுரிமை தரவேண்டும். அதேவேளை, அந்த நிதிகள் வடக்கு - கிழக்கின் இடைக்கால தன்னாட்சி அமைப்பு ஒன்று உடனடியாக அமைக்கப்பட்டு அதனூடாக வழங்கப்பட வேண்டும்.

அல்லது வடக்கு - கிழக்கிற் கோரிக்கைகளும் இந்தச் சந்திப் பின்போது முன்வைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி வௌடர் வில்டனும், நெதர்லாந்து பிரதி நிதியும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுடன் சந்திப்பு!

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 'நமது ஈழநாடு'க்கு நேற்றிரவு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் அழைப்பையேற்று நேற்று மாலை 4.30 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் சொல்ஹெய்ம் உடனான சந்திப்பில் அவர் என்ன விடயங்களைக் கூறினார் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவரை கேட்டனர்.

அதற்கு தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சியை மீள ஆரம்பிப்பதில் சொல்ஹெய்ம் மிகவும் ஆவலாக உள்ளார். ஆனால், (12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்ரன் பாலசிங்கம் இன்று வருகின்றார்!

(கிளிநொச்சி)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று காலை வன்னிக்கு வரவுள்ளார்.

லண்டனில் தங்கியிருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சமாதான முயற்சிகளுக்கு புலிகளின் தலைமைப்பீடத்துடன் கலந்தாலோசனை நடத்துவதற்காகவே கிளிநொச்சிக்கு வருகிறார்.

நேற்று லண்டனிலிருந்து புறப்பட்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது துணைவியார் அடேல் ஆன் ஆகியோர் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து விசேட ஹெலிகொப்ரர் மூலம் இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைவர்.

கிளிநொச்சி வரும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்றே தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து முக்கிய கலந்துரையாடல் நடத்துவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


பதிப்புலக வேந்தர்களே!

முதன் முதலில் வடபகுதியில் மட்டுமன்றி இலங்கையிலேயே ROLER IMAGE SETTER - COLOUR SEPARATION கலர் பிரித்தல் சேவையை அறிமுகப்படுத்துகின்றோம்.

நிலா பதிப்பகம்




- COLOUR SEPARATION SERVICE
  அனைத்து அளவுகளிலும் செய்து கொடுக்கப்படும்
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை
  (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை
  4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை
  HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல்
  (SPIRAL CLIP & MATERIAL CLIP' SERVICE




பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# சென்னை வந்த வாஜ்பாயை ரஜினிகாந்த் சந்தித்துப் பேச்சு!

சென்னை விமானநிலைய ஓய்வறையில் பிரதமர் வாஜ்பாயை நடிகர் ரஜனிகாந்த் சந்தித்துப் பேசினார்.

பிரதமர் வாஜ்பாய் நேற்று முன்தினம் சென்னை வந்தார். ஜெயலலிதாவுடன் ஒரே மேடையில் நடந்த பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டார். முன்னதாக அவர் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவரை பா.ஜ.க. தலைவர்கள் வரவேற்றனர்.

பின்னர், விமான நிலைய ஓய்வறையில் வாஜ்பாய் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். அப்போது அவரை நடிகர் ரஜினிகாந்த் சந்தித்தார். அப்போது, ரஜினி வாஜ்பாயின் காலில் விழுந்து ஆசிபெற்றார். வாஜ்பாயிடம் நதிகள் இணைப்புத் திட்டத்தை பா.ஜ.க. செயற்படுத்த ஆர்வம் காட்டுவதற்கு ரஜினிகாந்த் நன்றி தெரிவித்தார்.

பின்னர் - இது தொடர்பான கோரிக்கை மனு ஒன்றையும் ரஜினிகாந்த் கொடுத்தார்.

ரஜினி - வாஜ்பாய் சந்திப்பின் போது, ரசிகர் மன்றத்தலைவர் சத்தியநாராயணராவ், மத்திய அமைச்சர் திருநாவுக்கரசு உள்ளிட்டோர் இருந்தனர். வாஜ்பாயைச் சந்தித்து விட்டு வெளியே வந்த ரஜினி நிருபர்களிடம் பேசுகையில்,

நான் வாஜ்பாயைச் சந்தித்த போது தற்போதைய பிரதமருக்கும், வருங்காலப் பிரதமருக்கும் முதலில் முன்கூட்டியே வாழ்த்துக்களைத் தெரிவித்தேன். பின்பு நதிநீர் இணைப்பு குறித்த எனது தாழ்மையான வேண்டுகோளை வாஜ்பாயிடம் முன்வைத்தேன்.

வாஜ்பாய் 6 மாதத்துக்கு முன் பஞ்சாப்பில் பேசும்போது, நதிநீர் இணைப்புக்கு பகீரத முயற்சிகள் வேண்டும் என்று பேசினார். எனவே நதிநீர் இணைப்புத் திட்டத்துக்கு 'பகீரத யோஜனா திட்டம்' என்ற பெயர் வைக்கலாம் என்று அவரிடம் கூறினேன்.

இந்தத் திட்டத்திற்கு நீங்களும் கூட இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். நாமெல்லாம் சேர்ந்து திட்டத்தைச் செய்ய வேண்டும் என்றார். அதற்கு நான் இந்தத் திட்டத்தில் உறுதியாக இருப்பேன் என்று கூறினேன் என்றார்.

பின்பு நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ரஜனி, நதிநீர் இணைப்புத்திட்டத்திற்கு கட்டாயம் ஒரு கோடி தருவேன். வாஜ்பாயிடம் தேர்தல் குறித்துப் பேசவில்லை. நான் பிரசாரத்துக்கும் போகவில்லை என்றார்.

உங்களது ஆதரவை அ.தி.மு.க ஏற்கவில்லையே என்ற கேள்விக்கு, இது தமிழகத்தை ஆளப்போகிறவர் யார் என்பதை நிர்ணயிக்கும் தேர்தல் அல்ல. இந்தியாவை யார் ஆள்வது என்பதை நிர்ணயிக்கும் தேர்தல். வாஜ்பாய் திறமைவாய்ந்தவர். நாட்டை ஆளத்தகுதி உடையவர்.

இதுதான் எனக்கு கடைசி தேர்தல் என்று அவர் கூறியிருக்கிறார். நதிநீர் இணைப்புக்கு வாக்குறுதி கொடுத்து இருக்கிறார். மக்கள் யோசனை செய்து நல்ல முடிவை எடுப்பார்கள் எனற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார் ரஜினி.



இந்தியச் செய்திகள்

# உலகிலேயே வயது கூடியவர் ஜெய்ப்பூரில் வாக்களித்தார்!

உலகிலேயே அதிக வயதானவர், நேற்று முன்தினம் வாக்களித்தார்.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் நகரைச் சேர்ந்தவர், ஹபீப் மியான். இவர் ஜெய்ப்பூர் மகாராஜாவின் இராணுவ இசைக்குழுவில் கிளாரினெட் வாசிப்பவராகப் பணி செய்தார். பின்னர், இந்தியா சுதந்திரம் அடைந்தபின் ஜெய்ப்பூரில் கல்வித் துறையில் கடைநிலை ஊழியராக வேலை செய்தார்.

பின்னர் - அவர் ஓய்வுபெற்றுத் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவருக்கு தற்போது ஓய்வூதியம் கிடைத்து வருகிறது.

இப்போது ஹபீப் மியானுக்கு 125 வயது ஆகிறது. இவர்தான் உலகிலேயே வயதானவர் என்று கருதப்படுகிறது.

நேற்று முன்தினம் இவர் ஜெய்ப்பூர் நகரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தார். இவருக்கு தற்போது கண்பார்வை குறைவாக உள்ளது. பற்கள் இல்லை.

இவர் தனது உறவினர் உதவியால் ஜெய்ப்பூரில் ஜவஹர் நகரில் உள்ள 121 எண் கொண்ட வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்தார்.

கடந்த டிசம்பரில் நடந்த சட்டசபை தேர்தலிலும் இவர் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

ஹபீப் - 20.05.1878 இல் பிறந்தார். ஜெய்ப்பூரிலேயே வளர்ந்தவர். சமீபத்தில் இவர் தனது 90 வயது மருமகள் முன்னிபேகம், பேரன்கள் மகமூக், சேதன் ஆகியோருடன் ஹஜ் புனித பயணம் சென்று திரும்பினார்.

இவர் மீண்டும் ஒரு முறை ஹஜ் சென்றுவர விரும்புகிறார். இதற்காக இங்கிலாந்தில் உள்ள இந்திய தொழில் அதிபர் ஒருவர் 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளார்.

ராஜஸ்தான் ராஜமாதா காயத்திரி தேவி, 125 வயதான ஹபீப்புக்கு ஓய்வூதியத்தினை உயர்த்தி வழங்க சமீபத்தில் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்.

அரச ஆவணங்களின்படி ஹபீப்புக்கு தற்போது வயது 125 என்றாலும், எனக்கு 10 வயது இருந்த போது அல் கார் நவாப் பியாஸ், ஜெய்ப்பூர் வந்தபோது இறந்துவிட்டார். அவர் இறந்து இப்போது 124 ஆண்டு ஆகிறது. எனவே இப்போது எனக்கு வயது 134 என்று அடித்துக் கூறுகிறார் ஹபீப்.

# மாயாவதியை ஏமாற்றிய வாக்குப் பதிவு இயந்திரம்

(லக்னோ)

உத்தரப்பிரதேச மாநில முன்னாள் முதல் மந்திரியும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயாவதி நேற்று முன்தினம் வாக்களிக்க லக்னோ நகரில் மால் கலையரங்கம் பகுதியில் உள்ள "புராணா குலா" என்ற பகுதி வாக்குச் சாவடிக்கு காலையில் சென்றார்.

அவர் வாக்குப்பதிவு செய்யும் நேரத்தில் வாக்களிப்பு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது. இதனால் ஏமாற்றம் அடைந்த மாயாவதி "பிற்பகலில் வந்து வாக்களிக்கின்றேன்" என்று கூறிவிட்டு கடைசிக்கட்டத் தேர்தல் பிரசாரத்துக்கு மேற்கு உத்தரப்பிரதேச பகுதிக்குச் சென்றுவிட்டார்.

இது குறித்து மாநிலத் தேர்தல் அதிகாரி விஜய் சர்மா குறிப்பிடுகையில் "சில வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டது உண்மைதான். என்றாலும், அவற்றுக்குப் பதிலாக வேறு இயந்திரங்கள் உடனடியாக பயன்படுத்தப்பட்டன" என்றார்.

# வாஜ்பாய் தொடர்ந்தும் பிரதமராக நீடிப்பாராம்!

## முரளிமனோகர் ஜோஷி கூறுகிறார்

பாரதீய ஜனதா தலைவர்களில் ஒருவரும், மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சருமான முரளி மனோகர் ஜோஷி சமீபத்தில் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் "பா.ஜனதாவில்" நம்பர் 1, நம்பர் 2, நம்பர் 3 என்ற தலைவர்கள் வரிசை உள்ளது. வாஜ்பய்க்கு பிறகு நம்பர் 2 இடத்தில் உள்ளவர் பிரதமர் பொறுப்பை தானாக எடுத்துக்கொள்ள முடியாது என்று கூறியிருந்தார். ஜோஷியின் இந்தப் பேட்டி பா.ஜனதா தலைவர்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தியது.

இது குறித்து பா.ஜனதா செய்தி தொடர்பாளர் முக்தார் அப்பாஸ் நக்வி பதில அளிக்கையில் "வாஜ்பாய் தான் அரசின் தலைமை பதவி (பிரதமர்) வகிப்பார். அதில் குழப்பம் இல்லை. பிரதமர் பதவிக்கான வாரிசு யார்? என்பது பற்றி பா.ஜனதாவில் ஒருபோதும் விவாதம் நடந்தது இல்லை என்று விளக்கம் அளித்தார்.

முரளி மனோகர் ஜோஷி அலகாபாத் தொகுதியில் பா.ஜனதா வேட்பாளராக போட்டியிடுகிறார். நேற்று முன்தினம் அந்தத் தொகுதியில் வாக்களிப்பு நடந்தது. அங்கு முரளி மனோகா ஜோஷி வாக்களித்தார்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 600 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித் தொகை | |
|---|---|
| 2004 பெப்ரவரி | 2004 மார்ச் |
| 600 MT | 600 MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா.500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.05.07 ம் திகதி தொடக்கம் 2004.05.20 ம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

02. கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

03. பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.05.21 ம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப.2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

04. நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

05. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல் படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

06. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் பெப்ரவரி மாதத்திற்கு 30 நாட்களுக்குள்ளும், மார்ச் மாதத்திற்கு 60 நாட்களுக்குள்ளும் வலுவுடையதாக இருக்கும்.

செ.பத்மநாதன்,
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
06.05.2004.

(சி-2501)

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன் விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த
அருள் (றீல்ஸ்)



ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின்,முட்டாஸ் கடைச்சந்தி, K.K.S றோட்; யாழ்ப்பாணம். (சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
இன்று முதல் (மே 7) அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு ~ துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு ~ C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு ~ மேசை மின் விசிறி

நிறஞ்சனாஸ் சங்கானை
சிறிகாந், பூமிகா மற்றும் விவேக் நடித்த
ரோஜா கூட்டம்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Hell bound Hell Raiser - 02
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
4 ஆவது வாரமாக
இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
கில்லி



காட்சி நேரம் : 10.30,2.30,6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

வீடு விற்பனைக்கு
நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகாமையில் 3500 சதுர அடி கொண்ட பெரிய வீடு 4 1/2 பரப்புக்காணியுடன் - தனிமையான கிணறு, சகல வசதிகள், அதிக வருவாய் என்பவற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : கி.செந்தில், வதனா களஞ்சியம், கொக்குவில்.
(சி-2503)

# ஜனாதிபதி சந்திரிகா - ரணில் விரைவில் சந்தித்துப் பேச்சு



ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க விரைவில் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசசு வார்தகை நடாத்தவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அண்மையில் நோர்வே தூதுவர்களுடன் நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும், நோர்வே தூதுவர்களுடாக தமிழீழ விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தியுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது ஜனாதிபதி - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடுவாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், விட்ட இடத்திலிருந்து மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலே தமது ஆதரவை வழங்கமுடியும் என ரணில் விக்கிரமசிங்கவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விடயங்கள் குறித்து ரணில விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி இச்சந்திப்பில் விரிவாக ஆராய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிரக் கட்சிகளின் ஆதரவு தேவைப்படும் என்று ஜனாதிபதி எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பொலநறுவை வீட்டிலிருந்து இந்து விக்கிரகங்கள் மீட்பு

(வவுனியா)

பொலநறுவையில் வசிக்கும் வியாபாரி ஒருவரின் வீட்டிலிருந்து ஐந்து இந்து ஆலய விக்கிரகங்களும், 33 கடல் முத்துக்களும் கைப்பற்றப் பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பழமைவாய்ந்த இந்து ஆலயங்களிலிருந்து இந்த இந்து ஆலய விக்கிரகங்கள் கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விக்கிரகங்கள் எங்கிருந்து கடத்தப்பட்டன, எதற்காகக் கடத்தப் பட்டன என்ற விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விக்கிரகங்களில் ஒன்று ஐம்பொன்னால் செய்யப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்குச் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது.

# சமாதான முயற்சி பற்றிய கொள்கையை ஜனாதிபதி சந்திரிகா வெளியிடவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சியை முன்னகர்த்திச் செல்வது தொடர்பான தெளிவான கொள்கையை, ஜனாதிபதி வெளியிட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் சமாதான முயற்சி தொடர்பில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தெளிவு படுத்தப்படவேண்டும்.

தற்போது தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சியை ஜனாதிபதி எந்த நோக்கத்திற்காக, எந்த அடிப் படையில் முன்னெடுத்துச் செல்லவுள்ளார்.

அத்துடன், நோர்வே ஏற்பாட்டாளர்களின் பொறுப்புகள் எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது. என்ன அரசியல் தீர்வை முன்னெடுக்க இந்த சமாதான முயற்சியை ஜனாதிபதி கொண்டு செல்கின்றார் போன்ற சகல விடயங்களும் மக்களுக்குத் தெளிவு படுத்தவேண்டும்.

மக்களுக்குத் தெளிவுபடுத்தப் பட்ட நிலையிலேயே சமாதான முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும். இல்லையெனில், இது ஒரு அரசியல் நோக்கத்திற்காகவே ஜனாதிபதி சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்கின்றார் என்ற சந்தேகத்தைத் தமக்கு ஏற்படுத்தியுள்ளதாக ரணில் தனது கடிதத்தில் குறிப பிட்டுள்ளார். (01)



# மன்னாரில் வீடொன்றிலிருந்து கைக்குண்டு, டைனமெற் மீட்பு

(மன்னார்)

மன்னார் - பனங்கட்டிக்கொட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து கைக்குண்டு மற்றும் டைனமெற் போன்ற பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தமக்கு கிடைத்த இரகசியத் தகவலொன்றை அடுத்து குறித்த வீட்டைச் சோதனையிட்டு, மேற்படி பொருட்களை தாம் கண்டுபிடித்த தாக மன்னார் பொலிஸார் தெரிவித் தனர்.

இதனையடுத்து, அந்த வீட்டிலிருந்த கே.டொறின் மெல்கி (வயது 24) என்ற பெண்ணைப் பொலிஸார் கைது செய்து, மன்னார் நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

மேற்படி வெடிபொருட்கள் எவ்வாறு தனது வீட்டிற்குக்கொண்டுவரப்பட்டதென்பது தனக்குத் தெரியாதென குறித்த பெண் நீதிமன்றில் தெரிவித்தார். இதனையடுத்து இந்தப் பெண்ணைப் பத்தாயிரம் ரூபா காசுப்பிணையிலும், ஐம்பதாயிரம் ரூபா சரீரப்பிணையிலும் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

# பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசியலமைப்பை மாற்றுவதற்கு முயற்சி

## ஜனாதிபதி மீது அரசியல் கட்சிகள் குற்றச்சாட்டு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் அரசியலமைப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்தும ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த முயற்சி குறித்து - ஐக்கிய தேசியக்கட்சி, தமிழத்தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஜாதிக ஹெல உறுமய உட்படப் பல கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதி சந்திரிகா தனது பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில், மீண்டும் ஆட்சி அதிகாரங்களுக்கு வருவதற்கான தந்திரோபாயமாகவே, அரசியலமைப்பை மாற்ற முனைவதாகவும் இந்தக் கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இவ்வாறு பல்வேறு கட்சிகளின் எதிர்ப்புகளின் மத்தியிலும் அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கைகளில் ஜனாதிபதி தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார்.

இன்னொரு கட்டமாக அரசியலமைப்புச் சீர்திருத்த அமைச்சுக்கான முக்கிய பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இதன்படி ஜயம்பதி விக்கிரமரட்ன அரசியலமைப்புச் சீர்திருத்த அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் - அரசியலமைப்பு சட்டவிவகார அமைச்சின் முன்னாள் ஆலோசகராக விளங்கியதுடன், பல சர்வதேசரீதியிலான அரசியலமைப்பு சட்டம் தொடர்பான மாநாடுகளிலும் பங்குபற்றியிருந்தார். அத்துடன், பேராதனைப் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான விரிவுரையாளரான பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்க இந்த அமைச்சுக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் லக்சிறி பெர்ணாணடோ நோர்வேயின் சமாதானத்திற்கான தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைச்சினால் மேற்கொள்ளபபடும் சமாதான செயற்பாடுகளுக்கான முகாமையாளராகவும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - இந்த அமைச்சுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்களுடன் இன்னும் பல உறுப்பினர்களும், அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சுக்கான நியமனங்களை ஜனாதிபதி ஊடாக பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசியல் அமைப்பை மாற்றுவதில் முக்கிய பங்காற்றவுள்ளதாகத் தெரிவித்து ஜனாதிபதி இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை, அரசியலமைப்பை மாற்றுவதற்கான ஒரு தவிர்க்க முடியாத சூழலை உருவாக்குவதற்கான ஒரு தந்திரோபாய முயற்சி என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில்

# விவசாய அபிவிருத்திக்கு உலக வங்கி நிதியுதவி

மன்னார் மாவட்டத்தில் நீர்ப்பாசன, விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தியடையச் செய்யும் பொருட்டு, உலக வங்கியால் இருநூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை உலக வங்கிப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள். மன்னார் கட்டுக்கரைக்குளம் உட்பட பல குளங்கள் புனரமைக்கப்படுவதுடன், நீர்ப்பாசனம் மற்றும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் மன்னார் - முருங்கன் மத்திய மகா வித தியாலயத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மன்னார் மாவட்டத்தின் பல சமூகத் தலைவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# எஸ்.பி. மீதான விசாரணை இன்று உயர் நீதிமன்றில்

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா மீதான வழக்கு விசாரணை இன்று வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அண்மையில் ஹபராதுவையில் நடைபெற்ற ஏர்பூட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, நீதிமன்றத்தை அவமதிததுள்ளார் என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தவும் முடிவு செய்துள்ளது.

அமைச்சர் ஆற்றிய உரையின் பதிவு நாடாவை கேட்டு அறிந்து கொண்ட பின்னரே நீதிமன்றம் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அமைச்சரின் புதிய இல்லத்தில் வைத்து மேற்படி அமைச்சருக்கான அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

## கந்தப்பொல வன்முறைகள்

# விசாரணை அறிக்கை அடுத்தவாரம் கையளிப்பு!

கந்தப்பொலவில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட குற்றத் தடுப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரதிப் பொலிஸ் மா அதிபரான ஜெயந்த விக்கிரமரத்ன - தனது விசாரணை அறிக்கையை இந்தவாரம் பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வீதி விபத்து சம்பவத்தையடுத்து இரண்டு சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தில், இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த விபத்து சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட வன்முறைகளை விசாரிப்பதற்கே மேற்படி பிரதிப் பொலிஸ்மா அதிபர் - இந்திர டி சில்வாவினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் விக்கிரமரத்னவும், முனனாள் மேலதிகச் செயலர் எஸ்.விஜிதமுல்லவும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, சம்பவத்தின்போது கடமையிலிருந்த பொலிஸாரையும் மற்றும் சம்பவத்தை நேரில் கண்ட 25 பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின்பேரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களான சி.பி.இரத்னாயக்க, ஜனாதிபதியின் ஆலோசகர் பாலபட்டபெண்டி, அமைச்சுக்களின் செயலாளர் திலக் ரணவிராஜா ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று, நிலமைகளைப் பார்த்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தியுள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரியைக் கண்டறியும் முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதுடன், சம்பவத்தின்போது கடமையிலிருந்த பொலிஸாரின் பாதுகாப்பில் ஏதாவது குறைபாடுகள் இருந்ததா என ஆராயவுள்ளதாகவும் விக்கிரமரத்ன மேலும் தெரிவித்தார்.



பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிலையத்தின் பயிற்சி நிகழ்வில் -இரண்டாவது வருடப் பயிற்சியை முடித்துக்கொண்டோருக்கான சான்றிதழ் வளங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசியக்கொடியை தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

# சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் மீளவும் குழப்பம் வெடித்தது

## ஸ்ரீக் உட்பட 4 பேர் மீள வெளியேறினர்

(ஹராரே)

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இனப் பிரச்சினை மீண்டும் வெடித்தது. ஸ்ரீக் உட்பட அணிக்குத் திரும்பிய 4 வீரர்களும் மீண்டும் வெளியேறினர்.

இனப்பிரச்சினை காரணமாக தேர்வாளர்களிடம் சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் கப்டன் பதவியில் இருந்து ஹீத் ஸ்ரீக் விலகினார். கப்டன் பதவியினை ராஜினாமாச் செய்ததுடன் அணியில் இருந்தே அவர் வெளியேறினார்.

ஸ்ரீக்குக்கு ஆதரவாக வெள்ளை இன வீரர்கள் 15 பேரும் அணியில் இருந்து வெளியேறினர். ஸ்ரீக் கப்டன் பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து கறுப்பர் இனத்தைச் சேர்ந்த இளம் வீரர் தைபு முதல்முறையாக கப்டனாக நியமிக்கப்பட்டார்.

இதற்கிடையில் இலங்கைக்கு எதிரான 5 ஒருநாள் போட்டிகொண்ட தொடரில் சிம்பாப்வே அணி 0 - 5 என்ற கணக்கில் படுதோல்வியைச் சந்தித்தது. அதனைத் தொடர்ந்து அணியில் இருந்து வெளியேறிய ஸ்ரீக் உட்பட வெள்ளை இன வீரர்களுடன் சிம்பாப்வே கிரிக்கெட் சபை 3 ஆவது நபர் மூலம் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து, வெளியேறிய வீரர்கள் அணிக்கு மீண்டும் திரும்பினர். பின்னர் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான அணியிலும் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால், ஸ்ரீக், சுழற்பந்து வீச்சாளர் பிரைஸ், சகலதுறை வீரர் சீன்இர்வின், தொடக்க ஆட்டக்காரர் கிரிப்பர் ஆகிய 4 பேர் மட்டுமே அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதனால், நிறப்பிரச்சினை உள்ளுக்குள் புகைந்தபடியே இருந்தது.

இந்த நிலையில் சிம்பாப்வே அணியில் இனப்பிரச்சினை மீண்டும் வெடித்துள்ளது. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது கறுப்பு இனத்தைச் சேர்ந்த தைபுவை கப்டன் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக ஸ்ரீக்கை மீண்டும் கப்டனாக்க வேண்டும் என்று வெள்ளையின வீரர்கள் போர்க்கொடி தூக்கினர்.

வெள்ளையின வீரர்களின் இந்தக் கோரிக்கையை ஏற்க சிம்பாப்வே கிரிக்கெட் சபை மறுத்தது. இதைத் தொடர்ந்து அணிக்குத் திரும்பிய ஸ்ரீக், இர்வின், கிரிப்பர், பிரைஸ் ஆகிய நான்கு பேரும் மீண்டும் அணியில் இருந்து விலகியுள்ளனர்.

## வைத்தியசாலையில் மீளவும் மரடோனா அனுமதிக்கப்பட்டார்




ஆர்ஜென்ரீனா நாட்டின் பிரபல கால்பந்தாட்ட வீரர் மரடோனா. இவருக்குத் திடீரென மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதனால், பியூனஸ் அயர்சில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 12 தினங்களாகச் சிகிச்சை பெற்ற அவர் கடந்த சனிக்கிழமை வீடு திரும்பினார். பின்னர் அவர் கோல்ப் விளையாடினார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் மீண்டும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இது குறித்து அதிகாரபூர்வமான நிலையை வைத்தியசாலை வைத்தியர்கள் கூறமறுத்துள்ளனர்.

# பயிற்சியாளராக பாகிஸ்தான் செல்ல ஆவலாக உள்ளாராம் பிஷன்சிங்பேடி

'பாகிஸ்தானில் இளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பயிற்சியளிக்க ஆவலாக இருக்கின்றேன்' என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், சுழற்பந்து வீச்சாளருமான பிஷன்சிங்பேடி விருப்பம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் - பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர்கள் அப்துல் காதிர் மற்றும் சர்பிராஸ் நவாஸ் ஆகியோரின் தலைமையின் கீழ் இளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று அமைக்கப் போவதாகவும், அந்த முகாமில் இளம் பாகிஸ்தான் வீரர்களுக்கு பயனுள்ள வகையில் பயிற்சியளிக்க இந்தியாவின் பிஷன்சிங் பேடியும் அழைக்கப்படுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த வாரம் அறிவித்திருந்தது.

இது குறித்துப் பேட்டியளித்த பிஷன்சிங் பேடி இதுவரையில் பாகிஸ்தானில் இருந்து முறையான அழைப்பு எதுவும் எனக்கு வரவில்லை. பத்திரிகைகள் வாயிலாக நானும் அந்தச் செய்தியை அறிந்துகொண்டேன். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைத்தால் நான் அங்குசென்று பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சியளிக்கத் தயாராக இருக்கிறேன்.

சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சியளிக்க இந்தியாவில் முறையான பயிற்சி மையங்கள் உள்ளன. ஆனால், பாகிஸ்தானில் எதிர்கால சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் வகையில் தெளிவான திட்டமிடலும், முறையான பயிற்சி மையங்களும் இல்லை. எனவே, திறமையான இளம் வீரர்கள் பலர் பிரகாசிக்க முடியாமலே முடங்கிப் போய்விடுகிறார்கள். அங்குள்ள பயிற்சி மையங்களுக்குச் சென்று அவர்களுக்குப் பயிற்சியளிக்க நான் மிகுந்த ஆவலாக இருக்கிறேன் என்று பிஷன்சிங் பேடி கூறினார்.

## இந்திய வீரர்களில்

# சச்சினுக்கு அடுத்த துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஷ்மன் என்கிறார் பிரட்லீ



அவுஸ்ரேலிய அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான பிரட்லீ இந்தியா வந்துள்ளார். சென்னையில் நேற்று முன் தினம் அவர் கூறுகையில் - சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்ததாக வி.வி.எஸ்.லக்ஷ்மன்தான் சிறந்த துடுப்பாட்ட இடத்தைப் பிடிப்பார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடிகார நிறுவனமான, டைமெக்ஸ் நிறுவனத்தின் தூதராக பிரட்லீ நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிறுவனத்தின் 150 ஆவது ஆண்டுவிழாவை ஒட்டி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் பிரெட்லீ. அதன் ஒருபகுதியாக இவர் நேற்றுமுன் தினம் சென்னை வந்திருந்தார். அப்போது அவர் பேசுகையில் - 150 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்த நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்திய கிரிக்கெட் அணி கங்கூலி தலைமையில் மிகச்சிறந்த அணியாகத் திகழ்கின்றது. இந்த ஆண்டில் இந்தியாவுக்கு வரும் நாங்கள் அவர்களுடன் கடுமையாகப் போராடவேண்டியிருக்கும். ஷேன்வோர்ன் ஒரு மிகச்சிறந்த கிரக்கெட் வீரர் என்பது அனைவருக்கும் தெரியும். அவரது பங்களிப்பு எங்களது வெற்றிக்குப் பெரிதும் உதவும்.

இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர்கள் பலர் உள்ளனர். வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அடிக்கடி மருத்துவ ரீதியான பிரச்சினை ஏற்படுவது இயல்புதான். இது பெரியளவுக்கு சென்றுவிடாமல் உடனடியாகக் கவனிக்கப்படவேண்டும். சொகைப் அக்தர் இதுபோன்ற பிரச்சினையில் சிக்கிதான் சிரமப்பட்டு வருகிறார்.

அவரை எனக்கு நன்றாக தெரியும். 10 ஆண்டுகளாக நல்ல நண்பர். ஒரு வீரர் அனாவசியமாகப் பொய் சொல்லத் தேவையில்லை. எனவே, சொகைப் அக்தர் கூறுவதை நம்பித்தான் ஆகவேண்டும். இதுவே என் கருத்து.

டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி, சாதனை படைக்கக் கூடிய முயற்சியில் முத்தையா முரளிதரன் இருக்கிறார். இதற்கு இன்னமும் 7 விக்கெட்டுக்களே எடுக்க வேண்டும். ஆனால் அதற்குள் அவரது பந்து வீச்சுமுறை குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. இவர் இந்த சர்ச்சையில் இருந்து விரைவில் மீண்டு சாதனை படைப்பார். முத்தையா முரளிதரனோ அல்லது மிக நெருக்கத்தில் உள்ள ஷேன் வோர்னோ இந்தச் சாதனையை வெகு விரைவில் முறியடிக்கவுள்ளனர்.

இந்திய வீரர்களில் சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்ததாக வி.வி.எஸ்.லக்ஷ்மன் சிறந்த துடுப்பாட்டக்காரராகத் திகழ்வார். பல ஆண்டுகளாக இவரது ஆட்டத்தை கவனித்து வருகின்றேன். பல வருடங்களுக்கு முன்பு எனது பந்து வீச்சுக்களையே விளாசித் தள்ளியவர். இனிவரும் நாட்களில் சிறந்து விளங்குவார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## விளையாட்டு

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சிம்பாப்வே பயணம் பாதுகாப்பற்றது

## முன்னாள் அணித்தலைவர் அலெக்ஸ் ஸ்ருவார்ட்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சிம்பாப்வே பயணம் பாதுகாப்பற்றது, துரதிஷ்டவசமானது. இங்கிலாந்து கிரிக்கெட் சபை இந்த விடயத்தில் பிடிவாதமாக இருப்பது முற்றிலும் தவறானது என்று கருத்துத் தெரிவிக்கின்றார் இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் அலெக்ஸ் ஸ்ருவார்ட்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி வரும் ஒக்ரோபர் மாதம் சிம்பாப்வே சென்று, டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் ஆடுவதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. சிம்பாப்வேயில் இங்கிலாந்து வீரர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால், அங்குசென்று ஆட இங்கிலாந்து வீரர்கள் தயக்கம் காட்டுகிறார்கள்.

அதனால், சிம்பாப்வே செல்ல மறுக்கும் வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இங்கிலாந்து மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளன.

'சிம்பாப்வேயில் மனித உரிமைகள் பெருமளவு மீறப்படுவதாகவும், தற்போது சிம்பாப்வே கிரிக்கெட் சபையின் தன்னிச்சையான போக்குக் குறித்தும் கவலை தெரிவித்துள்ள அலெக்ஸ் ஸ்ருவார்ட் - 'இந்த சூழ்நிலையில் சிம்பாப்வே பயணம் செல்வது என்ற இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முடிவு தவறானது, முற்றிலும் துரதிஷ்டவசமானது, அங்கு இங்கிலாந்து வீரர்களுக்குப் பாதுகாப்பு இருக்காது என்பது எனது கருத்து' என்று அச்சம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் கிரிக்கெட் சபையும் தற்போது தர்ம சங்கடமான சூழ்நிலையில்தான் உள்ளது. திட்டமிட்டபடி இந்தத் தொடர் நடைபெறாவிட்டால், ஐ.சி.சி. - பெருமளவு தொகையை அபராதமாக வசூலிக்கப் போவதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபையை மிரட்டுகிறது. எனவே, இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் சிம்பாப்வேத் தொடரை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது என்று ஸ்ருவார்ட் விளக்கமளித்துள்ளார்.

## வீரர்கள் கௌரவிப்பும் காட்சி உதைபந்தாட்டமும்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் அகில இலங்கை ரீதியாக நடத்திய பகுதி II உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எட்டுப் போட்டிகளில் விளையாடி வெற்றி அடைந்த மன்னார் மாவட்டப் பள்ளிமுனை சென்லூசியா விளையாட்டுக் கழகம் கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினராலும், யாழ்ப்பாணம் வலிகாமம், பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கங்களாலும் மேற்படி அணி வீரர்கள் கௌரவிப்பும் மாபெரும் உதைபந்தாட்ட நிகழ்வும், நாளை மறுதினம் துரையப்பா விளையாட்டரங்கில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

மன்னார் வீரர்களைக் கௌரவிக்கும் இந்த நிகழ்வின் காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## மேற்கிந்தியத் தீவுகளுடனான

# ஒருநாள் போட்டி தொடரை சமன்செய்தது இங்கிலாந்து

(பிரிஜ்டவுன்)

வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுகள் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இரு அணிகளுக்கிடையே நடந்த டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் இங்கிலாந்து ஒரு ஆட்டத்திலும் மேற்கிந்தியத் தீவுகள் 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்றிருந்தன. மழை காரணமாக 3 ஆட்டங்கள் நடைபெறவில்லை. இந்த நிலையில் இரு அணிகளிடையே கடைசி மற்றும் 7 ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் பிரிட்ஜ்டவுனில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கட் இழப்பிற்கு 261 ஓட்டங்களை எடுத்தது. சர்வான் அபாரமாக ஆடி சதம் அடித்தார். அவர் 105 பந்துகளில் 13 பவுண்டரியுடன் 104 ஓட்டங்களை எடுத்தார். மற்றும் கெய்ல் 41, ஸ்மித் 39 பிரோவோ 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இங்கிலாந்து தரப்பில் காவ், ஹர்மிசன், ரொ அன், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து அணி - டிரெஸ்கோதிக் மற்றும் ஸ்டாசின் அபார ஆட்டத்தினால் 47.2 ஓவரில் 262 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட் வித்தியாசததில் வெற்றிபெற்றது. டிரெஸ்கோதிக் 82 ஓட்டங்களையும் ஸ்டார்ஸ் 66 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் பிராட்ஷா 2 விக்கெட்டையும், ராம்பவுல், கெய்ல், சர்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஒரு நாள் தொடரை 2 - 2 என்ற கணக்கில் சமன் செய்தது. ஆட்ட நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் டிரெஸ்கோதிக் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# மலையகத் தமிழர்களுக்கு ஆதரவாக வடக்கு - கிழக்கில் ஹர்த்தால்!

(கொழும்பு)

மலையகத்தில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு-கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

கந்தப்பொலவில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளின் காரணமாக இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டதோடு, தமிழர்களின் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டிருந்தன.

கந்தப்பொலவில் தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைக் கண்டிப்பதற்கு வடக்கு - கிழக்கு தமிழர்களும் முன்வரவேண்டுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திர சேகரன் விடுத்த வேண்டுகோளையடுத்தே, ஒருநாள் ஹர்த்தால் ஒன்றினை வடக்கு - கிழக்கில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் நடாத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கையளவில் இணக்கம் கண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், மலையகத்தில். இடம்பெற்ற வன்முறைகளைக் கண்டிக்கும் வகையில் கொழும்பில் கடையடைப்புப் போராட்டம் ஒன்றினையும், கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் தமது கட்சி மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



வேம்படிச் சந்திப் பகுதியில் உள்ள வீதியோரமாகத் தோன்றியுள்ள குழியைப் படத்தில் காணலாம்.

## சிகிச்சை பலனளிக்காமல் சிசு உயிரிழப்பு

கிளிநொச்சி - வெலிக்கண்டல் பகுதியில் அநாதரவான நிலையிலிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிசு, சிகிச்சை பலனளிக்காமல் நேற்றுமுன்தினம் உயிரிழந்தது.

அநாதரவான நிலையில் கிடந்த இந்த சிசு எறும்புக் கடிக்கும், கிருமிகளின் தாக்கத்தினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டதன் காரணமாகவே இந்த உயிரிழப்பு ஏற்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் தொடர்பாக - கிளிநொச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த மட்டுவில் மகா வித்தியாலயத்திற்கும் மட்டுவில் சிவன் கோவிலுக்கும் இடைப்பட்ட சுமார் 3 கி.மீ நீளமான வீதி தற்போது திருத்தப்பட்டுள்ளது.

கற்கள் போடப்பட்டு தார் ஊற்றப்பட்டு நேர்த்தியாகச் செப்பனிடப்பட்டுள்ளதால், இலகுவாகப் போக்குவரத்துச் செய்யக்கூடியதாக உள்ளது. (24)

# எழுதுமட்டுவாள் அரசினர் பாடசாலை மீளவும் சொந்த இடத்தில் இயங்க அனுமதி மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

எழுதுமட்டுவாள் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கச் செய்வதற்கு பாடசாலை சமூகம் நடவடிக்கை எடுத்துள்ள வேளையில் படையினர் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பத்தின்போது பாடசாலையை இயங்கச் செய்வதற்கு நிர்வாகத்தினர் அங்கு சென்றபோது அங்கு வந்த படையினர் பாதுகாப்பை காரணங்காட்டி பாடசாலையை இயக்க அனுமதி மறுத்து விட்டனர்.

மேலும் 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்மராட்சியின் பல பகுதிகளையும் படையினர் ஆக்கிரமித்தபோது - இப்பாடசாலையில் படைமுகாம் ஒன்றை நிறுவி அங்கு தங்கியிருந்தனர்.

பின்னர் சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் படையினர் பாடசாலையை விட்டு வெளியேறாத நிலையில், அப்பகுதி மக்கள் நடத்திய பல்வேறு போராட்டம் காரணமாக பாடசாலையில் இருந்து வெளியேறிய படையினர் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் பாடசாலையை இயக்க அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (122,17)

# மாணவனை காணவில்லையென தந்தை பொலிஸில் முறைப்பாடு!

பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டுச்சென்ற மாணவன் ஒருவனைக் காணவில்லையென அந்த மாணவனின் தந்தை யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த முறைப்பாடு செய்யப்பட்டது. ஜுட் பிரைனர் என்ற 17 வயதான மாணவனையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பாடசாலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு காலை 8 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்ட எனது மகன், மீண்டும் வீடுதிரும்பவில்லை யெனக் கூறப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். காணாமற் போன மாணவன் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இனங்காணப்படாத சடலம் அரச செலவில் அடக்கம்!

யாழ்.வின்சர் படமாளிகை வளவிலுள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இரு சடலங்களில் ஒன்று இனங்காணப்படாத நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை புதைக்கப்பட்டது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி கிணற்றில் பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்ட இந்தச் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது.

கடந்த 16 நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்த இந்தச் சடலம் எவராலும் இனங்காணப்படாத நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த செவ்வாய்க்கிழமை புதைக்கப்பட்டது. (தீ)

## கடற்தொழிலாளர்களின் நன்மைகருதி

# விற்பனை நிலையமொன்று தாளையடியில் திறந்துவைப்பு

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தாளையடியில் விற்பனை நிலையமொன்றை திறந்துவைத்துள்ளது.

கடற்தொழிலாளர்களின் நன்மை கருதி வலை மற்றும் கடற்தொழில் உபகரணங்களை கொண்ட விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்களில் 80 வீதமானோர் கடற்தொழில் செய்பவர்களாக உள்ளனர். இவர்களின் தேவைகளை இனங்கண்டு இந்த விற்பனை நிலையத்தை திறந்து வைத்துள்ளனர்.

இதுவரைகாலமும் கடந்த 2 வருடகாலமாக இவ் வலை உபகரணங்களைப் பெறுவதற்கு யாழ்ப்பாணம் அல்லது பருத்தித்துறை சென்றுதான் இவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்ததால், வீண் அலைச்சல், பணச்செலவு இருந்துவந்தது.

இந்த விற்பனை நிலையத்தை திறந்துவைத்ததனால் கடற்தொழிலாளர்கள் பெரும் நன்மையடைவார்கள என எதிர்பார்க்கப்படுகிறது. (17)

# முல்லைக் கடற்கரைப் பகுதியில் வெளிச்சவீடு அமைக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்களில் வெளிச்சவீடு அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, முல்லை மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதன் ஒருகட்ட நடவடிக்கையாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தின் கரையோரப் பிரதேசங்களில் வெளிச்சவீடு இல்லாமையால், ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தொடர்சசியாக பல இன்னல்களுக்கு உள்ளாகி வருவதை முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்தே, வெளிச்சவீடு அமைக்கும் முயற்சிகள் மேறகொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

# நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் 34 கிராமிய வங்கிகள் அபிவிருத்தி!

நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 34 கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்திற்கென நிகொட் நிறுவனம் 21 லட்சத்து 11 ஆயிரம் ரூபா செலவிடப்படவுள்ளதாக நிகொட நிறுவன அதிகாரி தெரிவித்தார்.

கடந்த கால போர் நடவடிக்கைகள் காரணமாகவும், பல்வேறு இடப்பெயர்வுகள் காரணமாகவும் யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் கூட்டுறவு அமைப்புக்களும், நிறுவனங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றினை பொது அமைப்புக்களும், கூட்டுறவு அமைப்புக்களும் சுட்டிக்காட்டியதையடுத்தே - நிகொட நிறுவனம் இந்த வங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (122)

## சேரனின் ஆட்டோகிராப் தமிழ்த் திரைப்படம்

யாழ்.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை பி.ப 3 மணிக்கு சேரன் இயக்கிய ஆட்டோகிராப் என்னும் தமிழ்த் திரைப்படம் வீடியோக் காட்சியாக புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## தபால் பெட்டிகள் இன்மையால் மக்கள் சிரமம்

முல்லை மாவட்டத்தின் நகரப் பகுதியிலும், கிராமப் புறங்களிலும் தபால் பெட்டிகள் இல்லாமை காரணமாக பொதுமக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக - முல்லை மாவட்ட தபால் அலுவலகம் முல்லை நகரப் பகுதியில் இயங்கிவருகின்றபோதும், தபால் சேவை சீரழிந்து காணப்படுவது மிகவும் கவலை தரும் விடயமெனவும் தெரிவிக்கப்படுகிறது.(122)



கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ். மாவட்ட செயலக திறப்புவிழாவில் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் நிற்பதையும் காணலாம். (94)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : பு.விதுஷனா
முகவரி : மலையாளந்தோட்டம், கொற்றாவத்தை

முதலாவது அகவையில்



பெயர் : எஸ்.லவன் கஜானா
முகவரி : அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.கம்ஷிகா
முகவரி : பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

இரண்டாவது அகவையில்



பெயர் : செ.கீர்த்தனா
முகவரி : கல்வயல், சாவகச்சேரி.



# சிநேகிதியே

*யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல் லூரியில் பொறியியல்துறையில் பகுதித் தலைவராகவும், கட்டட நிர் மாணத்துறையில் சிரேஷ்ட விரிவுரை யாளராகவும் கடமையாற்றும் லல்தா தேவி விஸ்வலிங்கம் - கடந்த பெப்ர வரி மாதம் தகவல் தொழில்நுட்பம்சார் புலமைப்பரிசில் ஒன்றுக்காக பிலிப் பைன்ஸ் நாட்டுக்குச் சென்று வந்தவர். அவருடன் சிநேகிதியே பகுதிக்காகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண் டோம்...*

## பெண்களின் முன்னேற்றங்களுக்கு ஆண்களின் அடிப்படைவாதம் தடையாக இருக்கக்கூடாது

எனது சொந்த இடம் நவாலி. எனக்கு இப்போது 54 வயதாகின்றது. 1976 ஆம் ஆண்டு கட்டடம்சார் பொறியியல் பயிற்சியினை முடித்துக்கொண்ட நான், 1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் போதனாசிரியராகப் பதவி ஏற்று இன்றுவரை சுமார் 27 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றுகின்றேன். சிரேஷ்ட போதனாசிரியர் என்ற தொழில் தகைமையையும் கொண்டுள்ளேன்.

இல்வாழ்க்கையில் 1984 ஆம் ஆண்டில் இணைந்துகொண்டபோது, எனது கணவர் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றினார். பின்பு ஏற்பட்ட நாட்டு நிலமை காரணமாக அவர் தனது வேலையை இழக்க நேர்ந்தது. எனினும், எனது குடும்பச்சூழல் மிகவும் சந்தோசமாகத்தான் இருந்தது.

கணவன் - மனைவி என்ற வேறுபாடுகள் எங்களுக்குள் காணப்படுவதில்லை. நாங்கள் இருவரும் சிறந்த நண்பர்களாகவே வாழ்ந்து வருகின்றோம். நான் வேலை முடித்துச் செல்கின்றபோது, எனக்குத் தேநீர் போட்டுத்தந்துதவி செய்வார். அவர் இவ்வாறு உதவி செய்கின்றார் என்பதற்காக நான் வேலை செய்யாமல் இருப்பதில்லை. வேலை முடிந்து வந்ததும் என்னால் முடிந்தவரை செய்யக்கூடிய வீட்டு வேலைகளைச் செய்து வருகின்றேன். எனக்கு இரண்டு பிள்ளைகள். ஒன்று ஆண் மற்றையது பெண். இருவரும் உயர் தரப்பிரிவில் உயிரியல் பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

பிலிப்பைன்ஸுக்குப் புலமைப்பரிசிலுக்காக யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியில் நானும், அனுராதபுர தொழில் நுடபக் கல்லூரியைச் சேர்ந்த சிங்கள இனத்தவர் ஒருவருமே சென்றிருந்தோம். எங்கள் இருவருடனும் 12 நாடுகளிலிருந்து 19 பேர் இந்தச் செயலமர்வுக்காக வந்திருந்தனர்.

இவர்கள் அனைவருமே இன, மத, மொழி வேறுபாடுகள் இன்றி சகோதரத்துவத்துடன் இனிமையாகப் பழகினார்கள். தகவல் தொழில்நுட்பத்தில் பல்லூடகம் சம்பந்தமான பல் வேறு விளக்கங்களும், செயல்முறை வகுபபுக்களும் இடம்பெற்றன.

இங்கு நடைபெற்ற வகுப்புக்கள் அனைத்தும் இன்றைய உலகுக்கு மிகவும் தேவையான ஒன்றாக காணப்படுவதோடு, தகவல் பொருளாதாரத்தில் முக்கியமானதொன்றாகவும் அமைகின்றது.

புலமைப்பரிசில் பயணத்திற்கு எமக்கு கல்லூரி வழங்கிய ஒத்துழைப்பைப் பார்த்தால், கல்லூரியைப் பொறுத்தமட்டில் பெண்கள் விடயத்தில் மிகவும் பின் தங்கிய அடிப்படை வாதமே காணப்படுகின்றது. இந்த வகையில் பெண்கள் உயர்பதவி வகிப்பதனை இங்குள்ள பெரும்பாலான ஆண்கள் வெறுப்பதையே காணலாம். இதற்கு எடுத்துக்காட்டாக - 1989 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும், 1991 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கும், 1995 ஆம் ஆண்டு ஜப்பானுக்கும் கிடைக்கவிருந்த புலமைப்பரிசில் நான் பெண் என்ற காரணத்தால் தடைப்பட்டுப்போனது.

இதற்கெல்லாம் எமது கல்லூரியில் காணப்படும் பெண் தொடர்பான அடிப்படைவாதமே காரணமாகும். என்னைப் பொறுத்தமட்டில் நான் இத்தகைய புலமைப்பரிசில்களுக்குப் பொருத்தமானவர் என்றே கருதுகின்றேன். ஆனால், இங்கு காணப்படும் நடவடிக்கைகளால் நானும் என்னைப் போன்ற பெண்களும் பாதிக்கப்படுகின்றனர்.

நான் ஆங்கிலம், சிங்களம், ஜப்பான் போன்ற மொழிகளில் நிறுவனரீதியாக தகைமைகளைக் கொண்டுள்ளேன். என்பது குறிப்படத்தக்கது.

இப்பொழுது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பொறியியல் டிப்ளோமாவையும், யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறியினையும் கற்றுக்கொண்டிருக்கிறேன். இதைவிட கணினி தொடர்பான தேடல்களிலும் ஈடுபடுகின்றேன். அத்தோடு, தொழில் வழிகாட்டுநர் மற்றும் அறிவுரை நிலையப் பயிற்சியினையும் பெற்றுள்ளேன்.

இது தொடர்பான அறிவுரை வழங்கும் தகுதிப்பெறுமானம் எனக்கிருந்தும், இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை



எமது கல்லூரி நிர்வாகம் புறந்தள்ளுகின்றது.

நான் நினைக்கின்றேன் - என்னைப்போலதான் பல பெண்கள் அலுவலகத்தில் திண்டாடுகின்றார்கள், அதனை வெளிப்படுத்த ஊடகங்கள் கிடைக்காது அல்லது சமூகப் பெறுமானம் கருதிப் பொறுமையாக இருந்து விடுகின்றார்கள் போலும்.

உலக நாடுகள் பலவும் இன்று பெண்கள் உரிமை தொடர்பாக முன்னேற்றம் கண்டு வரும்வேளை, இலங்கையைப் பொறுத்தவரையில் பெண் வீராங்கனைகளைக் கொண்டுள்ளதோடு, சமவுரிமை என்று சமுகத்துக்கு வழி காட்டும் இங்கு - இப்படிப்பட்ட ஓர் பின்னடைவான நிலையை யாராலும் பொறுத்துக் கொள்ளமுடியாது.

இந்தச் செயலானது - எங்கே போகின்றோம், இனி என்ன செய்யப்போகின்றோம் என்பதைச் சிந்திக்கத் தூண்டுகின்றது.

இவரது குடும்ப வாழ்க்கை மிகவும் இனிமையானது. குழப்பங்களற்றது. தொழில் ரீதியான பாதிப்புக்கள் எதுவும் அற்ற குடும்பச் சூழலாகும். இவர் தனது அலுவலகத்தில் இருந்துகொண்டு என்னுடன் கருத்துக்களை பகிர்ந்தபடியே அலுவலகக் கடமைகளையும் ஆற்றிக்கொண்டிருந்தார்.

இன்று ஐரோப்பாவிலும் சரி, ஆசியாவிலும் சரி பெண்கள் உயர்பதவிகளை வகிக்கின்றனர். ஏன் இலங்கையின் ஜனாதிபதியும் பெண்தானே. ஆனால், அலுவலகங்களைப் பொறுதத மட்டில் பெண்கள் விடயத்தினைக் கருத்தில் கொள்வதில்லை. இதை எதிர்கொண்டு வெற்றி பெறவேண்டும் என்பதே அவர் வாதமாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில் ஈழத்து பெண்கள் தகவல் பொருளாதாரத்தில் சர்வதேசப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தாயானவள் ஒரு பல்கலைக்கழகம் போன்று விளங்குவதால், பெண்கள் பெறும் கல்வியானது சகல துறைகளிலும் முன்னேற்றம் காண்பது. சில ஆண்களின் அடிப்படை வாதம் தடையாக இருக்கக்கூடாது என்பதே எனது கருத்தாகும் எனக் கூறிமுடித்தார்.

**நேர்காணல் - ஜெயா**

## பெண் தன்னை சக்தியாக்கும்

பெண்ணியத்தின் முக்கிய நோக்கம் அல்லது இலக்கு - ஆண்களை ஒட்டு மொத்தமாக வெறுப்பதா அல்லது பெண்மையை ஆண் பரிணாமங்களை வெளிக்கொணர்வதா என்று புரியவில்லை. ஒட்டுமொத்தமாக ஆண்குலம்- பெண்ணியத்தை வெறுக்கிறது என்கிற எண்ணம் பெண்களிடையே நிலவுகிறது.

நமக்கு இனறு தேவை ஆணாதிக்க மனோபாவமோ அலலது பெண்ணிய நோக்கோ அலல. மூச்சுக்காற்றைக்கூட நிதானித்துவிட முடியாத சூழலில், ஆண் சமூகரீதியாக சந்திக்கும் அநேக பிரச்சினைகளை இன்றைய பெண்ணும் சந்திக்கிறாள். எனவேதான், பெண்- ஆண் மீதும், ஆண் - பெண்மீதுமான மனிதாபிமான ஆதரவான அணுகுமுறை இன்றைய காலகட்டத்தில் அவசியமாகிறது.

இரவுநேரம், வேலை செய்து களைத்து படுக்கும் மனைவி தூங்கட்டும் என்று, சிணுங்கும் குழந்தையை தோளில் போட்டு தட்டிக் கொடுக்கும் கணவன்மார்களும் உண்டு.

அதேபோல், சிறுநீர் கழித்தால்கூட 'இந்தா இந்தா பிடி' என்கிற ஆண்களும் உண்டு. பலமும் பலவீனங்களும் ஒரு வருக்கொருவர் பஙகு போட்டுக்கொண்டிருக்கையில், ஆண்- பெண் என்ற வேறுபாடு பார்த்துக்கொண்டிராமல், மனித பலம், மனித பலவீனம் என்று அணுகுவதே ஆரோக்கியமானது.

இந்த ஆண் - பெண் குழப்பம், பிறப்பிலேயே நமக்குள் இருந்து வருகின்றது. உடல் ஆரோக்கியத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் போல், மன ஆரோக்கியத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. சிறுபராயத்திலேயே ஆண் - பெண் வேறுபாட்டை விஷம்போல் ஊட்டி விடுகிறோம். ஆண்- பெண் தொடுகை என்பது ஒரு தகாத செயலாகக் கருதப்படுகிறது.

ஆயிரம் பக்கங்களில் பேச, எழுத முடியாததை ஒரு சின்ன தொடுகை சொல்லுமல்லவா? 'ஹலோ' என்று கைகுலுக்கும் போது ஒரு மெல்லிதான சந்தோஷம் வருகிறதல்லவா?

தொடுகை, ஒரு தகாத செயலாகக் கருதபபடும்வரை, பஸ்ஸின் கூட்டத்தினூடே ஆண்ன் விரல்கள் பெண்ணின் உடலை தொட முயற்சி செய்துகொண்டே, தான் இருக்கும்.

ஆண் - பெண்ணை அடிமையாக்கும் ஆணாதிக்கச் சிந்தனையும், ஆணை வெறுக்கும் பெண்ணின் உணர்வும் மாற்றப்பட வேண்டும்.

பெண்ணியவாதி என்று தன்னை முத்திரை குத்திக் கொண்ட ஒருவர் 'நாமெல்லாம் விலங்குகள்தான்.

ஒருவரையே வாழ்நாள் முழுவதும் நேசிக்கிறோம். வெளியே சொன்னால் தவறாகி விடுமென்று சொல்லாதிருக்கின்றோம். நன்றாக யோசியுங்கள்.

செக்ஸ் ஓர் உணவுபோல எங்கு சாப்பிடுகிறோம் என்பதல்ல முக்கியம்'' என்கிறார்கள்

அப்படியெனில், நமக்கென்று ஒரு கடப்பாடும், கோட்பாடும் தேவையில்லையே. நாம் மனிதர்களாக இருப்பதை மறப்போமானால்,



எதற்காக நமக்கென்று ஒரு சமூகம்? என்று ஒரு பெண்ணியவாதியிடம் கேட்டாள் - அவர் கருத்தை மாற்றிக்கொள்வதாயில்லை.

இந்தவிடத்தில் பாரதியின் 'பெண்' நினைவுக்கு வந்தாள், பெண்ணியம் என்கிற பெயரில் பெண்ணாதிக்க சிந்தனைகள் உலாவுவதை அறிந்துகொண்டது அன்றுதான்.

தன்னை சக்தியாக்கும், தன்னை உணர்ந்து கொள்ளும், தன் முகத்தை தானே அணிந்து கொள்ளும் பெண் - பாரதி கண்ட கனா?

மனிதர்கள் தங்களை மனிதர்களாக நோக்கச் செய்கின்ற நிலை ஏற்படவேண்டும். ✷

## சிநேகிதிக்கு ஒரு மடல்



### அன்புள்ள சிநேகிதியே,

உன் நலம் நாடித் தொடர்கிறேன்.

உள்ளத்து உணர்வுகளுக்கு உருவம் கொடுத்து, வண்ணத்தமிழ் இலக்கியத்தின் எண்ணக்கருக்களால் வலுச்சேர்ந்து நீ வரைந்த மடல் கிடைக்கப்பெற்றேன்.

தமிழர்தம் பண்பாட்டிலே ஆண் – பெண் உறவு என்பது குடும்ப வாழ்வீலே தான் சங்கமமாகின்றது. என எழுதியிருந்தாய். அதைநான் ஏற்றுக்கொள்கின்றேன். அதற்காக உள்ளத்தால் ஒன்றுபடாத இரு உள்ளங்களை திருமணம் என்னும் பந்தத்தால் இணைத்து வைத்து வலியானாலும் வாழ்ந்தே முடிக்கவேண்டுமென்ற உனது சமூகக் கோட்பாட்டை என்னால் அங்கிகரிக்கமுடியாது.

உள்ளங்களால் இருவரும் இணையும் போதே குடும்ப உறவு இணைகின்றது. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், உனது சமூக அமைப்பு எங்கோ பிறந்து ஒருபோதும் சந்திக்காத இருவரை கணவன் மனைவிகளாக இணைத்து வைக்கின்றது. இதனால், பலபிரச்சினைகள் ஏற்படுகின்றன. இங்கு பாதிக்கப்படுபவளாகப் பெண் காணப்படுகின்றாள். எல்லாவற்றுக்கும் மேலாக "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்'' என பெண்ணின் உள்மன உணர்வுகளுக்குக் கட்டுப்பாடு போடப்படுகின்றது.

இதனால் எத்தனையோ பெண்கள் காலம் முழுக்க கண்ணீருடன் வாழ்ந்துள்ளார்கள். திருமணம் பற்றி சிந்தனையின்போது பெண்ணுக்கு முக்கியத்துவம் அளிக்கப் படவேண்டும். அவளது விருப்பு வெறுப்பிற்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். எமது கலாசாரம் ஆண்களையும், பெண்களையும் சகஜமாகப் பழக அனுமதிப்பதால் ஒருவரது விருப்பு வெறுப்புக்களை மற்றவர் புரிந்துகொள்கின்றனர். தம்மை இசைவுபடுத்த சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. இதனால், குடும்ப வாழ்வில் இணையும் போது பிரச்சினைகள் பெரும் பாலும் எழுவதில்லை.

கணவனுக்காகக் கானகம் சென்ற மிதிலை மகள் மைதிலி பற்றி கனதியாக எழுதியிருந்தாய். ஜானகி மீதும் தசரதன் மைந்தன் சந்தேகப்பட்டு அக்கினிப் பிரவேசம் நடத்திய மறுபக்கத்தை மறந்து விட்டாயா? உனது சமூகத்தில் பெண்ணின் நிலைமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. உனக்கு ஒன்றை உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன். உங்களது பண்பாட்டிலே உயிரினும் மேலானதாக ஓம்பப்படும் கற்பொழுக்கம் பெண்ணின் உடலிலல்ல உள்ளத்திலே இருக்கின்றது.

எமது கலாசாரத்தின் காலவோட்டத்தினுள் சிக்கிக் கரைந்துபோன உறவுகள் எத்தனை என எழுதியிருந்தாய். உனது சமூகத்தில் மாமியார் பெருமையினாலும் வரதட்சனை என்றும் வறட்டுக் கௌரவ வேண்டுதலாலும் வாடிப்போயுள்ள பெண்களை மறந்துவிட்டாயா? இன்னும் எத்தனையோ விடயங்கள் என்னுள் எழுகின்றன. எல்லாவற்றையும் எழுதிவிட இப்பொழுது முடியாது. ஒன்றை மட்டும் உனக்கு எழுதி என் மடலை முடிக்கின்றேன்.


உன் இருப்பின்ன நியாயப்படுத்துவதை விடுத்து யதார்த்தமாக சிந்திக்கப்பழகு. அப்போதுதான் உன்நிலைமை உனக்குப் புரியும். உன்மடல்காணும் வரை.

**அன்புள்ளசிநேகிதி**
**~ லெஸ்லி ~**

# பிஞ்சுமுகத்தின் தேடல்

நேற்றுத் தொடக்கம் மழைபெய்து கொண்டிருக்கிறது. பெரியமழை, எல்லா இடங்களிலும் ஒரே வெள்ளம். எங்கடை வீட்டிற்குள்ளும் இன்னும் கொஞ்ச நேரத்திலை வந்திடும் போலை இருக்கு. மஞ்சள் நிறத்திலை மண் கலந்து ஒரேஞ்பார்லி சோடா நிறத்திலை... அள்ளிக் குடிக்கவேணும் போலை இருந்தது. சீ!... எவ்வளவு அழுக்கெல்லாம் கலந்திருக்கும். எனக்கு ஏதாவது செய்ய வேணும் போலிருந்தது. இப்ப தண்ணியிலை ஒரு கப்பல் செய்துவிட்டால் என்ன! என் எண்ணத்தைச் செயலாக்கவேண்டும். எங்கட வீட்டிலைப் பேப்பர் கிடையாது. ஓ! இப்ப நினைவு வருகுது, அக்காவிடம் பெரிய கொப்பி இருக்கு. அதிலை கிழிப்பம். என் கண்கள் அக்காவின்ரை பெரிய கொப்பியைத் தேடின. வளையிலை கட்டித்தூக்கியிருக்கும் பாய்க்கட்டுக்கு மேலை கொப்பி கிடக்கு. சரி! அக்கா இப்ப எங்கை நிக்கிறா? எங்கடை வீட்டைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேணும். எங்கடை சொந்த இடம் காங்கேசன்துறை எண்டுதான் அப்பா சொன்னார். எனக்கு ஆறுமாதமாக இருக்கும் போது இடம்பெயர்ந்து எல்லா இடமும் அலைஞ்சுபோட்டு, இப்ப எட்டு வருசத்துக்குப் பிறகு இஞ்சைவந்து இறங்கினம். எங்கடை அப்பாவின்ரை அண்ணையும் இஞ்சைதான் குடிசை கட்டியிருக்கிறார். அவரை நான் 'வன்னிப் பெரியப்பா' எண்டுதான் கூப்பிடுவன். அவர் வன்னியிலை இருந்து வந்து இங்கே இருக்கிறார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். எங்களிலையும் என்னோடை சேர்த்து ஏழுபேர். அப்ப... எல்லாமாகப் 15 பேர். எல்லோரும் சேர்ந்து விளையாடும்போது ஒரே சத்தமாகத்தான் இருக்கும்... பக்கத்து வீட்டுக்காரர்! அவை பெரிய கல்வீட்டுக்காரர்! ஆனால், பிள்ளைகுட்டி கிடையாது. வீட்டைச் சுத்திப் பெரிய மதில். அதுக்கு மேலே தெரியும் குறோட்டன் செடி. பெரிய இரட்டைக் கேற். ஆனால், எப்பவும் பூட்டினபடிதான் கிடக்கும். இரண்டு கார் வைச்சிருக்கினம். அந்த வீட்டிலை இருக்கிற பொம்பிளைக்கு மொட்டைத்தலை. காற்சட்டைதான் போடுறவா. சொண்டெல்லாம் சிவப்புச் சாயம் பூசி இருக்கும். அண்டைக்கு ஒரு நாள்.

நாங்கள் 15 பேரும் கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருந்தம். அப்ப மழையில்லாமல் எல்லாம் வறண்டு புழுதி பறந்துகொண்டிருந்தது. எங்கடை 30 கால்களும் புழுதி கிளம்ப, விளையாட்டு மும்முரமாக இருந்தது. செல்லாதான் கிளி. நடுக்கோட்டில் நின்று மறிச்சுக்கொண்டிருந்தாள். அப்ப பக்கத்து வீட்டுத் 'தேவடியாள்' ஐயையோ நான் இப்படிச் சொல்லைக்கூடாததென்று அம்மா சொன்னவ. வாயைப் பொத்திக்கொண்டேன். கார் வந்து சரக் எண்டு நிண்டுது. போச்சுது! நான் அதை வாய் பார்த்துக்கொண்டிருக்க, காய் எல்லாம் பழத்துக்குப் போட்டுது. எங்கடை பக்கத்துப் பூரணி பேசினாள். 'வாய் பார்த்துக்கொண்டு நிக்கிறாயடி! உன்னை இனி மறிக்கிறதுக்கு விடக்கூடாது'. நான் ஒன்றும் பேசவில்லை. தலையைக் குனிஞ்சுகொண்டு காரைப் பார்த்தன். அவ! இறங்கிவந்தா... நான் வடிவாகப் பார்த்தேன். தலையெல்லாம் புழுதி நிறம்... முகமெல்லாம் றோஸ் கலர்... காற்சட்டையும் சட்டையும்... காதிலை ஒரு பெரிய வளையம்... மூக்கிலை ஒரு வெள்ளை மூக்குத்தி ... கண்ணெல்லாம் ஏதோ பூசி இழுத்துக்கிடந்தது. காலிலை கறுப்புச் சப்பாத்து... அவ எங்களிட்டை வாறா... இப்ப! என்ன செய்யிறது. 15 பேரும் மெல்லமெல்ல ஒண்டாக நிண்டம். வரட்டுப் பாப்பம்! நான் கிளியைப்போல சிலுப்பிக் கொண்டு நின்றேன். கிட்டவராமல் கொஞ்சம் எட்டிநிண்டு எங்களை வடிவாகப் பாத்தா! நானும் இப்ப என்னைப் பார்த்தன்! கிழிஞ்ச சட்டை ஊசிகுத்தவிலலை. பெரியப்பாவின்ரை மகன்மார் 4 பேர் சேட்டுப் போடாமல் ஊததைக் காற்சட்டையும் வெறும் மேலுமாய் நிக்கினம். என்ரை கடைசித் தங்கச்சி ஆரணி... ஐயோ யங்கி மட்டும் போட்டுக் கொண்டு ஒல்லிக் குச்சியாய், மூக்குச் சளி வழிய நிககிறாள். மூதேசி.. மூக்கையெண்டாலும் துடைச்சுப் போட்டு நிக்கலாந்தானே. எனக்கு அவளிலை கோபந்தான் வந்தது. ஆனால், எல்லாற்றை தலையும் அவவின்ரை தலையைப்போல புழுதிநிறமாய் அச்சொட்டாக இருந்தது. எங்கடை நிறம்... எல்லாரும் கறுப்புத்தான். ஆரணி மட்டும் கொஞ்சம் மாநிறம்.



அவவின்ரை முகத்தைப் பார்த்தன். 'எள்ளும் கொள்ளும் வெடிக்கும்'- இது அப்பா அடிக்கடி சொல்லுறது. நானும் நினைச்சன். சரிதான்! முகம் நெருப்புத்தணல்போலச் சிவப்பாக இருந்தது. அதிலை எள்ளையும் கொள்ளையும் போட்டால் வெடிக்கும்தானே! அம்மன் கோயில் குளிர்த்தியிலை பொங்கல் இறக்கின அடுப்புத்தணலுக்கை நான் உப்பைப்போட, இது படபடவென்று வெடிக்க..., அம்மா என்னைப் பேசி அடிக்க வந்தது இப்ப நினைவுக்கு வந்தது... இப்ப அவ வாயைத் திறந்தா பட்டினிப்பட்டாளங்கள்... இனிமேல் இஞ்சை வந்து விளையாடக்கூடாது. எவ்வளவு காசு செலவளிச்சு மதிலுக்கு அழகாக வர்ணம் பூசு விச்சன். என்ன வேலை செய்திருக்கிறியள்! குரல் எனக்கு இடி முழககம்போலக் கேட்டது... தொடர்ந்து இங்கிலீசிலை பெரிஞ்சு தள்ளினா. எங்களுக்கு ஒரு இழவும் விளங்கவில்லை. கல்லுரோட்டிலை மாட்டு வண்டில் போறதுபோல சத்தம் மட்டும் தான் கேட்டது. எங்கடை தம்பிக்கு அதைக் கேட்கச் சிரிப்புவர அவன் களுக்! எண்டு சிரிக்க, 15 பேரும் நாதஸ்வரக்காரர் ஒத்து ஊதுவதுபோலத் தொடர்ந்து சிரிக்க ஒரே சிரிப்புத்தான். அவ கோபத்திலை ஒருமுறை சுழண்டு பார்த்தா! எனக்கு விளங்கிவிட்டுது. மனுசி தடி தேடுது. நல்ல காலம் மதில் கட்டினது. வேலியெண்டால் அம்மா இடுங்குவதுபோல சட்டென்று இடுங்கிப் பட்டென்று முதுகிலை இரண்டு வரி வைக்கலாம... அவ இப்ப என்ன தேடுறா! கார்க்கதவைப் போய் திறந்தா! கதவு திறக்க, உள்ளேயிருந்து ஒரு அழகான நாய்குட்டி தாவிப்குதித்து வந்தது. நல்ல சடைக் குட்டி. அது ஓடி வந்து தப்பியன்ரை காலை நக்கிப்போட்டு, அவனைப் பார்த்துக் குலைத்தது. அவன் குனிந்து அதைத் தடவினான். அநத அம்மா... பதறிய படி ஓடி வந்தா! ஜிம்மி இஞ்சைவா! எண்டு கூப்பிட்டா. அது போகவில்லை. தன்ரை நாயப் பாஷையிலை ஏதோ சொல்லிச்சு. அவ இங்கிலீசிலை ஏதோபேச, நாயும் திரும்பி ஏதோ பேச, ஒரே வேடிக்கையாக இருந்தது. அவ நாயைப்பிடிக்கவர, நாய் எங்கடை கூட்டத்துக்கை வந்து பதுங்கி ஒளிக்க, கொஞ்சநேரம் நல்ல கள்ளன் - பொலீஸ் விளையாட்டாக இருந்தது. எனக்கு இப்ப அவவைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. வெயிலிலை வேர்த்துக் களைத்து, பூசின பூச்சொல்லாம் கரைய பார்கக, ஒரே அலங்கோலமாய் இருந்தது. நான் நாயைக் கூப்பிட்டன். ஜம்மி இஞ்சை ஓடிவா! அது எனக்குக் கிட்ட வந்து இரண்டு முன்னங்காலையும் தூக்கி 'வணக்கம் சொன்னது. நான் அசந்து போனன். குட்டியை அப்படியே தூக்கினன். பஞ்சுபோல கணகணவென்று, அணைத்துக் கொண்டேன். என்ரை தங்கச்சியைத் தூக்கி வைத்திருப்பதுபோல இதமாக இருந்தது. அந்த அமமாவிடம் குட்டியைக் கொடுத்தேன். அம்மா வாங்கிக்கொண்டு 'ராங்ஸ்' எண்டு சொன்னா. நாங்கள் எல்லேரும் சேர்ந்து ஒரேகுரலில். நனறி என்று கத்தினம். அம்மா காரைநோக்கி நடந்துபோனா. அவவின்ரை தோளுக்கு மேலாலை ஜிம்மி கால்களைத் தூக்கி நன்றி சொன்னது. தூரத்தே மழை இரைச்சல் கேட்டது. நாங்கள் ஜிம்மியைப் பார்த்துக் கையைக் காட்டினோம். மழைத்துளிகள் இப்போது படபடவென்று விழத்தொடங்கின.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# அறிந்து கொள்வோம்

❊ அதிக நாட்கள் பயணம் மேற்கொள்ளும்போது, துணி தைக்கும் ஊசி, குண்டூசி, சட்டைஊசி, தெறி போன்றவற்றை எடுத்துச் செல்லுங்கள். அவை முக்கிய தேவைகளுக்கு உதவும்.

❊ சலோரேப்பை குளிர்சாதனப்பெட்டியில் சிறிது நேரம் வைத்தால் அதனை எளிதாக பிரித்தெடுக்கலாம்.

❊ சவர்க்காரத்தை வெட்டவேண்டுமானால், கத்தியை சிறிதுநேரம் சுடுநீரில் போட்டுவிட்டு, பின்பு சவர்க்காரத்தை வெட்டினால், மிக எளிதாக வெட்டிவிடமுடியும்.

❊ போத்தல் மூடி திறக்கமுடியாத அளவுக்கு இறுக்கமாக இருந்தால் சுடுநீரில் அமிழ்த்தி எடுத்த துணியை மூடிப்பகுதியில் சிறிதுநேரம் இறுகக்கட்டி வைக்கவும். பின்பு மூடியின் மேற்பகுதியில் குளிர்ந்த நீரை ஊற்றுங்கள். பின் எளிதாக மூடியை கழற்றிவிடமுடியும்.

❊ உள்ளி, வெங்காயம்; மீன் போன்றவையை வெட்டிய பின் கையில் சிறிதளவு உப்பை தேய்த்து பின் சவற்காரம் போட்டு கழுவினால் மணம் இல்லாமல் போய்விடும்.


❊ கோடைகாலத்தில் குளிர்ந்தநீரில் முட்டைகளைப்போட்டுவைத்தால், 10 நாட்கள் வரை பழுதாகாமல் இருக்கும்.

❊ தோசைமாவில் ஒரு தேக்கரண்டி வெந்தயத்தூள் சேருங்கள். தோசை மொறுமொறுப்பாக இருக்கும்.

❊ பால் காய்ச்சிய பாத்திரத்தை 15 நிமிடம் தண்ணீரில் ஊறவைத்துவிட்டு கழுவுங்கள் பாத்திரம் சுத்தமாக இருக்கும்.

# துளசிச் செடியின் மகிமை

☆ துளசிச்செடியில் கிருஷ்ண துளசி, இராம துளசி, காட்டுத்துளசி என்று மூன்று வகைகள் உள்ளன. இதில் கிருஷ்ண துளசியில் அதிகளவில் மருத்துவக் குணங்கள் இருக்கின்றன.



☆ துளசிச்செடியின் மணம் கிருமிகளை அழிக்கிறது. காற்று மற்றும் தண்ணீரில் இருக்கும் நோய்க் கிருமிகளை அழிக்கும் சக்தியும் துளசிக்கு அதிகமாக இருக்கிறது.

☆ துளசி இலையைப் பிசைநது மூக்குக்கு அருகில் வைத்து சுவாசிப்பதால், இரத்த சுத்திகரிப்புக்கு ஏற்படும்.

☆ முகத்தில் கறுப்பு புள்ளிகளோ, சிறிய பருக்களோ இருந்தால், அதில் துளசிச் சாற்றை தேயுங்கள். அவை நீங்கும்.

☆ தலைமுடியில் துளசிச் சாற்றை தேய்த்தால் முடி அதிக கறுப்பாகும்.

☆ தோலில் இருக்கும் தொற்றுநோய்க் கிருமிகளை அழிக்கும் வல்லமை துளசிச்சாற்றுக்கு உண்டு. விஷம் குறைந்த பூச்சிகள் கடித்தால், அந்த இடத்தில் துளசிச் சாற்றை தோய்க்கலாம். தோலில் மெல்லிய துவாரங்களில் படிந்திருக்கும் அழுக்குகளை வெளியேற்றும் சக்தி துளசிக்கு உண்டு. அதனால் சருமத்திற்கு அழகும் மிருதுவான தன்மையும் கிடைக்கும்.

# குழந்தையை நலமாகப் பெற்றெடுக்க



✤ பிரவசகாலம் வரையில் பாரமான பொருட்களைத் தூக்குதல், சைக்களில் சவாரி செய்தல், தையல் வேலைகளில் ஈடுபடுதல் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

✤ ஏழு மாதமானால் அதிகமான வேலைகளைச் செய்தல்கூடாது.

✤ தினமும் காலை மாலை என இரண்டு முறை குளித்தல் வேண்டும்.

✤ தேவையில்லாத சிந்தனைகளைத் தவிர்த்து மனதை ஒரு நிலைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

✤ சுத்தமான காற்றும், நல்ல இரத்த ஓட்டமும் கிடைப்பதற்கு மாலையில் சிறிது நேரம் நடந்து கொள்ளல்வேண்டும்.

✤ அதிக நேரம் இரவில் கண் விழிக்காமல் நிம்மதியாக நித்திரை கொள்ளுதல் வேண்டும்.

✤ கர்ப்பமான மூன்று மாதங்களும் கடைசி மூன்று மாதங்களிலும் பயணங்கள் செய்வது தவிர்க்கப்படவேண்டும்.

✤ உணவில் சற்று உப்பைக் குறைதது கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள், போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

✤ ஆடைகளை இடுப்பில் இறுக்கும் படி போடாதீர்கள்.

✤ மருத்துவ ஆலோசனைகளை மாதம் ஒருமுறை செய்துகொள்ளுங்கள.

# மருதாணி அலங்காரம்

திருமணப் பெண்களுக்கு மருதாணி வைப்பது என்பது ஓர் முக்கிய சடங்காகவே மாறிவிட்டது. மருதாணி வைப்பதற்கு இவ்



வளவு முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணம் - இதிலுள்ள அதிகமான மருத்துவ குணங்கள்தான்.

மருதாணி போடுவதால் ஒரு விதமான சுகந்தமணம் இருப்பதால் நமது மனமும், உடலும் சுத்தமாகவும், அமைதியாகவும் இருக்கும். இதன் இலையின் நறுமணம் நம்மனதில் ஏற்படும் சோர்வைத் தடுக்கும்.

இது நகச்சுத்தி வந்தவர்களும், பித்த வெடிப்பு உள்ளவர்களும் தொடர்ந்து மருதாணியை வைத்துக் கொண்டால் பூரணகுணம் கிடைக்கும். மருதாணியை தலைமுடிக்கு வைப்பதால் தலைமுடி நல்ல பலத்தையும் பளபளப்பையும் பெறுகிறது. குளிர்ச்சியைத் தருவதால் மனம் அமைதி அடைகிறது. பொடுகு வராமல் தடுக்கிறது. முடி நீண்டும் அடர்த்தியாகவும் வளர உதவுகிறது.

நிறைய பெண்களுக்கு மருதாணியை முறைப்படி வைப்பதற்கு தெரிவதில்லை. அதனால், அது பற்றி பார்ப்போம்.

மருதாணி போட்டுக்கொள்வதற்கு முதல் நாளே எட்டு மணித்தியாலத்திற்கு முன்பாக மருதாணியை கலந்து வைக்கவேண்டும்.

இதற்காகத் தரமான மருதாணிப் பவுடரை கடைகளில் வாங்கவேண்டும். மெல்லிய கண்ணாடித் துணியின்மூலம் பவுடரை அரித்து கொள்ளவேண்டும். எலும்பிச்சம் பழச்சாறு, சுண்ணாம்பு கலந்த கும்குமம், தேயிலைச் சாயம் போன்றவற்றினை கலப்பதன்மூலம் சிவப்பு நிறத்தன்மையை மேலும் கூட்டலாம். சாதாரணமாகக் குளிர்மையான உடல்நிலை உள்ளவர்களுக்கு மருதாணி நிறம் அதிகம் படியாது.

மருதாணி அலங்காரம் செய்து முடிந்ததும் தோசைக்கல்லில் தோசை வார்ப்பதன்மூலம் அதில் வரும் புகையினைக் கைகளில் படும்படி கைகளை தோசைக்கல்லில் மேல் பிடிக்க வேண்டும். புகையானது கைகளிலுள்ள மருதாணி அலங்காரத்தில் பட்டவுடன் சிவப்புத் தன்மையை கைகளுக்குக் கொடுக்கின்றது. மருதாணிக் கலவை கட்டித் தன்மையாக இருந்தால், போடும்போது கைவலிக்கும். அதைத் தடுக்க இளகிய பதத்தில் கலங்கவும்.

சிலர் மருதாணி போடுவதால் உடலில் அதிக குளிர்ச்சி காரணமாக தடிமன், காய்ச்சல் வந்துவிடும் என்று பயப்படுவார்கள். அது தப்பு.

மருதாணி போட்டு 15 நிமிடத்திற்கு ஒருமுறை எலுமிச்சம் பழச்சாற்றை அதில் தடவவேண்டும். இவ்வாறு 15 நிமிடத்திற்கு ஒருமுறை தடவுவதால் அலங்காரம் கலையாமலும், மருதாணி கீழே விழாமலும் இருக்க வழி வகுக்கும்.

ஆகவே பெண்களே இப்போது கோடை வெயில் சுட்டெரிக்கின்றது. அதற்குள் நம் உடலை வெயிலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள இப்போதே மருதாணி வைக்க ஆரம்பியுங்கள். என்னதான் வெயில் அடித்தாலும் உங்களால் தாங்கிக்க முடியும்.

# இந்த வார பலன்கள்

## 07.05.2004 - 13.05.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| புத | சூ ராகு | | செவ் சுக் சனி |
| யுரே | 07 மா 5-27 தனு-சந<br>09 கா 7-53 மே-புத<br>09 மா 6-23 மக-சந்<br>11 இ 10.03 கும்-சந் | | |
| நெப் | | | குரு |
| | | கேது | |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்குச் செய்தொழில் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். சுபமங்கள கருமங்கள் நிகழலாம். பொருளாதாரநிலை முன்னேற்றமாக இருக்கும். குடும்பப் பெண்கள் திருப்தியுடன் காணப்படுவர். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி அனுகூலமாகும். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் செல்ல வாய்ப்புண்டு. திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் நல்ல முடிவுக்குவரும். உத்தியோகத்தில் உள்ளோர் திறம்படச் செயலாற்றி முன்னேற்றம் காண்பர். சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கலாம். அதிகாரிகளின் ஆதரவு உண்டு. தனித்தொழில் செய்வோர் நற்பலன் காண்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகளால் குறிப்பிடத்தக்க இலாபம் உண்டு. மாணவர்களுக்குக கல்வியில் ஊக்கமும், ஆசிரியர்களின் நல்லுறவும் ஏற்படும்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு ஓரளவு நற்பலன் உண்டு. தொழில் சிறப்பாக நடந்தாலும் அநாவசியச் செலவுகள் தவிர்க்க முடியாமல் இருக்கும். புத்திரர்களால் பெருமை சேரும், குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படும். குடும்பப் பெண்கள் ஆடம்பரப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுவர். விவாகப் பேச்சுக்கள் காலதாமதத்தின் மேல் கைகூடும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும். தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மன உற்சாகம் உடையவர்களாகக் காணப்படுவர். சக தொழிலாளர்களின் உதவி கிடைக்கும். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோர் இலாபம் அடைவர். வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் அடையும். பழைய கடன்கள் வசூலாகும். மாணவர்களுக்கு முன்னேற்றமும், உயர்கல்வி கற்கும் வாய்ப்புக்களும் உண்டாகும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



மிதுன இராசியினருக்கு ஏழரைச்சனி நடுப்பகுதி நடப்பதால் நற பலன் குறைவாகவே இருக்கும். குடும்பத்தவர்களிடையே கருத்து வேற்றுமைகளும், சச்சரவும் நிலவும. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். தேவையற்ற வீண் விரயங்கள் ஏற்படும். இடையிடையே தேகசுகக் குறைவுகள் காட்டும். குடும்பப் பெண்களுக்கு அலைச்சல்கள், சிரமங்கள் ஏற்படும். கொடுக்கல், வாங்கல்களில் பிணக்குகள் தோன்றும். உத்தியோகத்துறையினருக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். அதிகாரிகளின் கெடுபிடிகளும் ஏற்படும். சம்பள உயர்வுகள் தாமதமடையும். வியாபாரிகளுக்கு நட்டத்திலேயே வியாபாரம் நடக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் தேவை.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுககு இவ்வாரம் நன்மை, தீமைகள் கலந்த பலன்கள் காட்டக் கூடும். குடும்பத்தவர்களுக்கு உறவுகள் சில சந்தர்ப்பங்களில் பாதிக்கக்கூடும். இனபந்துக்கள், அயலவர்கள் ஆகியோருடன் சச்சரவுகள் தோன்றும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகமாகும். செலவைக் கட்டுப்படுத்துவதில் பல கஷ்டங்கள் ஏற்படும். குடும்பப் பெண்கள் மன விரக்தியுடன காணப்படுவர். விவாகப் பேச்சுக்கள் கால வரையறையின்றி தள்ளிப்போகும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். வேலைத்தளங்களில் பல சிக்கல்கள் தோன்றலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்தையே ஏற்படுத்தும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். மாணவர்களுக்கு ஏமாற்றங்கள் அதிகரிக்கும். சுயமுயற்சி ஓரளவு நன்மை தரும்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் நல்ல உறவு வளரும். வாழ்க்கைத்தரம் முன்னரிலும் பார்க்க உயர்ச்சி அடையும். தொழில்மூலம் பொருள்வரவு சிறப்படைய இடமுண்டு. இல்லத்தில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். குடும்பப் பெண்கள் ஆடம்பரப் பொருட்கள் வாங்குவதில் நாட்டமுடையவர்களாகக் காணப்படுவர். திருமண முயற்சிகள் சாதகமான பலனைத்தரும். புதிதாகத் தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு நன்மையான பலன் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். தொழில் உயர்ச்சியும் சிலருக்குக் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு அரசாங்க வங்கி உதவிகள் உண்டு. வியாபாரம் முன்னேற்றமடையும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவார்கள். மாணவர்களுக்கு ஆசிரியரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னிராசியில் பிறந்த அன்பர்களுக்குப் பல சிறப்பான பலன்கள் காத்திருக்கின்றன. குடும்பத்தவர்களுக்கு சிறப்பும், நல்லுறவும் மேலோங்கும். பண வருவாய் திருப்தியாக இருக்கும். வருமானத்திற்கு ஏற்ப செலவுகளும் தவிர்க்கமுடியாமல் இருக்கும். புத்திரர்களால் நன்மை உண்டு. நண்பர்கள், உறவினர்களால் நன்மைகிட்டும். பெண்பாலாருக்கு அழகுசாதனப் பொருட்களில் நாட்டம் அதிகமாகக் காணப்படும் விவாக முயற்சிகள் நன்மையான பலனைத்தரும். உத்தியோகத்தர்கள் சிறப்பான பலனைக் காண்பர். உயர் அதிகாரிகளால் பல நன்மை உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் அடையும். எதிர்பார்த்த இலாபம் கிட்டும். மாணவர்கள் சுயமுயற்சியால் முன்னேறுவார்கள். உயர் கல்வி உண்டு.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே அமைதியும், நல்லறிவும் வளரும். தேகசுகம் சில சந்தர்ப்பங்களில் குறைவாக இருக்கும். சில கருமங்களில் இழுபறி ஏற்பட்டாலும் இறுதியில் வெற்றி கிடைக்கும். வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கலாம். எனினும் குடும்ப உறவினர்களின் உதவி உண்டு. திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் பின்னர் நிறைவுபெறும் உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு குறையும். தொழில் சம்பந்தமான பிரயாணங்களில் அலைச்சல் மிகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சீராக நடக்கும். புதிய முதலீடுகள் செய்வதற்கு நன்மையான காலம். மாணவர்களுக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டு.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு தொழிலில் பிரயாசை கூடுதலாகக் காட்டும். இல்லற சுகம் குறையும். புத்திரர்களால் துன்பங்களும், செலவுகளும் அதிகமாகும். பணவருவாய் குடும்பச் செலவை ஈடுசெய்ய முடியாமலிருக்கும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையும். வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். குடும்பப் பெண்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். மனச்சோர்வுடன் காணப்படுவர். விவாகப் பேச்சுக்கள் இழுபறிநிலையில் இருக்கும். உத்தியோகத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலைமிகுதியும், மேலதிகாரிகளின் வெறுபபும் ஏற்படலாம். புதிதாக வேலைவாய்ப்பைத் தேடுபவர்களுக்கு காலதாமதம் எடுக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையையே காட்டும். கடன் வியாபாரம் கஷ்டங்களைக் கொடுக்கும் மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே இருக்கும்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதியும் நல்லுறவும் வளரும். இனபந்துக்கள் உதவி செய்வார்கள். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறைவேறும். பொருள்வரவு நன்றாகவே அமையும்.வெளிநாட்டிலிருந்து சிலருக்கு பணம் வந்துசேரும். தேகசௌக்கியம் பாதிப்படையாது. குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். போக்குவரத்து தொழிலாளர் கூடிய இலாபம் பெறுவர். உத்தியோகத்திலுள்ளோர் சிறப்படைவர். அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். சிலருக்கு வேதன உயர்வு கிட்டும். வர்த்தகர்கள் வியாபாரத்தைப் பெருக்க உசிதமான காலம். இயந்திரசாதனங்கள் விற்பனை செய்வோர் அதிக இலாபம் பெறுவர். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்படுவார்கள்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் பிறந்தவர்களுக்கு நற்பலன் குறைவாகவே இருக்கும். குடும்பத்தவர்களுக்குப் பற்பல பிரச்சினைகள் தோன்றும். புத்திரர்களின் உதவி கிடைத்தாலும் குடும்பச் செலவுகளைச் சமாளிப்பது கடினம். வருவாய்கள் உரிய நேரத்தில் கிடைக்காமல் போகும். குடும்பப் பெண்களுக்கு நாவடக்கம் அவசியம் தேவை. கொடுக்கல் வாங்கல்கள் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வைத்தியச் செலவுகள் அதிகரித்துக் காணப்படும். திருமணப் பேச்சுக்கள் நிறைவுபெறும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்குப் பல புதிய பொறுப்புக்கள் வந்துசேரும். அவைகளை சமாளிக்கவேண்டிய நிலை தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த கதியிலேயே நடக்கும். வருமானம் வீழ்ச்சியடையலாம். மாணவர்களுக்குக் கல்வியில் குழப்ப நிலை தோன்றும். சுகக்குறைவுகள் காட்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சீராக இருக்கும். உறவினர்களிடையே நல்லிணக்கம் தென்படும். வீட்டுக்கு விருந்தினர்களின் வருகை கூடுதலாக இருக்கும். அதனால் செலவுகள் அதிகமாகும். பொருள்நிலை அதிகம் பாதிப்படையாது. தேகசுகம் நன்றாக அமையும் திருமணப் பேச்சுக்கள் வெற்றியைத் தரும். விவசாயிகளுக்குத் தமது பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் நல்ல இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தினர் செல்வாக்குப் பெறுவர். சிலருக்கு சம்பள உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்களுக்கு சுய முயற்சி கூடுதலாக இருக்கும். பாராட்டுதல்கள், பரிசில்கள் கிடைக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு தொழில்கள் சிறப்பைத்தரும். வருமானம் அதிகரிக்கும் வீண் அலைச்சல்களும் தேவையற்ற செலவுகளும் கூடுதலாகக் காணப்படும். குடும்பத்தவர்கள் மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடந்துகொள்வர். தேகசுகம் சிறு பாதிப்புக்கு உள்ளானாலும் தாக்கமில்லை. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின்பின்னர் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு பிரயாசை கூடுதலாகவே இருக்கும். எனினும் சக தொழிலாளர்களின் உதவி உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும் அதிக இலாபம் கிடையாது. அழகு சாதனப் பொருட்கள் வியாபாரம் செய்வோர் கூடிய இலாபம் பெறுவர். மாணவர்களுக்கு விடா முயற்சியும் ஊக்கமும் முன்னேற்றத்தையும் தரும்.

---

**நூல்நோக்கு** **பா.தனபாலன்**

# தமிழ்மொழிப் பயிற்சி

## தரம் 3 இற்கான புதிய நூல்




ஆரம்பக் கல்வி மாணவர்களின் சிந்தித்தல், கற்றல், தொடர்பு கொள்ளல், ஆக்கத்திறன, அறிவு வளர்ச்சிக்கு மொழியறிவே அடிப்படையானது. இந்த அடிப்படையை உணர்ந்து தரம் மூன்று மாணவர்களின் தாய்மொழி அறிவை விருத்தியாக்க தமிழ் மொழிப் பயிற்சிகள் என்ற நூல் வெளிவந்திருக்கிறது. இந்த நூலாசிரியர் ஆரம்பக்கல்வி மாணவர்களின் நவீன உளவியல் தேவைகள், சூழ்நிலைகள், பாடசாலை நிலைமை என்பவற்றினூடாக இந் நூலை சிறப்பாக ஆக்கியுள்ளார்.

விளையாட்டுக்களுடன்கூடிய சிந்தனை விருத்திச் செயற்பாடுகள், மாணவர்களின் மொழியறிவைத் தூண்டும் செயல்முறைகள் நூலுக்கு மேலும் மெருகேற்றுகின்றன.

இன்று தமிழ்மொழியில் - குறிப்பாக ஆரம்பக்கல்வித்துறையில் வெளிவரும் புதிய ஆக்கங்கள் போதாமல் உள்ளது. மேலும் தேர்ச்சி அடிப்படையிலான கற்றலுக்கான புத்தாக்கங்களும் இல்லாத ஒரு சூழலில் இந்நூல் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. நூலில், தரம் மூன்று மாணவர்கள் உரிய மொழித் தேர்ச்சிகளை எய்தும் வகையில், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்திற்கு ஏற்ப புதிய கல்விச் சீர்திருத்தங்களை அனுசரித்து இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் மொழித்திறன் செயற்பாடுகளுடன், மாணவர்ளுக்கு அவற்றை மீள வலியுறுத்தும் வகையிலான பயிற்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றமை மேலும் நூலுக்கு மெருகுசேர்க்கின்றன. மாணவர்கள் இயன்றவரை தாமே சுயமாகச் செயற்படக்கூடியவாறு நூலில் எடுத்தாளப்பட்ட விடயங்கள் பொருத்தமான முறையில் படிமுறைகள் ஆக்கப்பட்டுப் பயிற்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன. இத்துடன் மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தக்கூடிய படங்கள், இணைப்புக்கள், குறியீடுகள், பாடல்கள், சக்கர விளையாட்டுக்கள் மிகப்பொருத்தமாகக் கையாளப்பட்டுள்ளன. மாணவர்கள் தாமாக விரும்பிக் கற்கும் நுட்பங்கள் இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளமை நூலின் தரத்தை மேலும் உயர்த்துகின்றது.

இந்த நுட்பம் மாணவர்களிடையே கற்றலில் உசாவல் விருப்பைத்தூண்டும். இந்த உசாவல் விருப்பை அறிவின் நுழைவாயில் என்றும் அழைப்பர். இந்நுழை வாயில்கள் பல நூலில் எழுதப்பட்டுள்ளன. மொழி விருத்திக்கு அடிப்படைகளான சொல்லாட்சி, வாக்கியம் அமைத்தல், பிழையின்றி சொற்கோபுரங்களை உருவாக்குதல், சொற்களைப் பொருத்துதல், சொற்சக்கரங்களை உருவாக்குதல், கலையாக்கம், பாட்டுக்குப் பொருளகாணல், சொல் இணைப்பு நுட்பங்கள், வாக்கிய இணைபபாக்கம் என்ற வகையில் மொழிததிறன்களை விருத்தியாக்கும் பல செயற்பாடுகளை ஒழுங்கமைத்து இருக்கின்றார் நூலாசிரியர் மு.விக்னேஸ்வரன். அவரது இந்த நூலாக்க முயற்சி பாராட்டத்தக்கது.

மேலும் நூலில் மொழி எண்ணக்கருவாக்க அபிவிருத்தி நிலைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. சொற்கள் - குறியீடுகள் மூலமும், அனுபவங்கள் மூலமும், சூழல் இடைத்தாக்கத்தின் மூலமும், பொதுக்கருத்தினை விருத்தியாக்கும் செயலமுறைகள், பிரித்தறிதல்கள், பொதுமையாக்கங்கள் என்பவையே எண்ணக்கருவாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது பிரித்தறிகை, செயல்முறை, இடைவினைகள், பொதுமைப்படுத்தல்கள், ஆற்றல்களை விருத்தியாக்கும் கேட்டல், பேச்சு மொழித்திறன்களினூடாக வாசிப்பு, எழுத்து மொழித்திறன் எண்ணக்கருக்கள் - விருத்தியாகின்றன. மற்றும் மொழியின் ஒலி வடிவங்கள் வரி வடிவங்களாக அமைக்கப்படுதலையே எழுத்து என்கின்றோம். எழுத்துத் திறனையும் எண்ணக்கருக்களினூடு தரம் 3 மாவர்களுக்கு ஏற்படுத்தும் உளப்பயில்வுகளையும் இந்நூல் இயம்பி நிற்கின்றது.

இன்றைய மாணவர்களின் - முக்கியமாக ஆரம்பக் கல்வி மாணவர்களின் தேவையை நிறைவுசெய்யும் மொழி விருத்தி ஆக்கமாக இந்நூல் வெளிவந்திருக்கிறது. இந்நூலை முழுமையாக ஆய்வு செய்து வாசிக்கும்போது கல்வியியல் தத்துவஞானி வைற்கெட் தெரிவித்த கருத்தொன்று என் நினைவுக்கு வந்தது.

**'There is only one subject matter of Education and that is' life in all its manifestations'** அதாவது கல்விக்கு ஒரே ஒரு அறிபொருள் மாத்திரமே உண்டு, அது அனைத்து வெளிப்பாடுகளிலும் உயிர்ப்பூட்டலாய் நிற்றலாகும். இவ்வகையில் மு.விக்னேஸ்வரனுடைய தமிழ் 'மொழிப் பயிற்சிகள்' நூல் ஒரு துறையின் பல் பரிமாணங்களினூடாக மாணவர்களைக் கற்கவைக்கும் வளநூலாக உள்ளது. தொடர்ந்தும் நூலாசிரியர் சிறந்த படைப்புக்களை வெளிக்கொண்டுவரவேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை அவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானத்திற்கான சிக்கலான பயணம்

மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் அதன் ஏற்பாட்டாளராகிய நோர்வே அரசு தீவிரமாக ஈடுபடத்தொடங்கியுள்ளமையானது, தற்போது நிலவும் அமைதிநிலையின் எதிர்கால உத்தரவாதம் குறித்து நம்பிக்கையீனத்துடன் கூடிய சந்தேகங்களைக் கொண்டிருக்கும் சமாதான ஆர்வலர்களுக்கு சிறிது தெம்பைக்கொடுத்தாலும் கூட, இந்த முன்னெடுப்பு முயற்சிகள் எதிர்கொள்ளவுள்ள நெருக்கடிகள் மற்றும் பல்வேறு அழுத்தங்கள் ஆகியன குறித்த முன்னெச்சரிக்கை உணர்வானது அவர்களுக்கு ஆழ்மனதில் அவநம்பிக்கையுடன் கூடிய துயர அலைகளையும் ஏற்ப டுத்தவே செய்கிறது.

மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூறப்படும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்து கடந்த திங்களன்று கிளிநொச்சிக்கு வந்து தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து உரையாடி அறிந்து கொண்ட நோர்வே நாட்டின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான குழு ஒன்று மீண்டும் கொழும்பு திரும்பி அது தொடர்பான அம்சங்களை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு விளக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தாம் ஏற்கனவே, முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளடங்கிய வரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை புதிய அரசுடன் ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாகவும் இந்தப் பேச்சுக்கள் இலங்கை தவிர வேறு நாடொன்றில் நடத்தப்படவேண்டும் என்று கூறியுள்ளதாகவும் நோர்வே தரப்பினரால் கதிர்காமருக்கு கூறப்பட்டுள்ளது.

இது குறித்து கதிர்காமர் ஜனாதிபதிக்கு தெரிவிப்பார். ஜனாதிபதி அரசுடன் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருவார். அது பின்னர் நோர்வே ஏற்பாட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டு அவர்கள் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்படும்.

- இதுவே அதற்கான ஒழுங்குமுறை செயற்பாட்டு வழியாகும். ஆனால் இதற்குள் இருக்கும் சிக்கல் குறித்து நோர்வேத் தரப்பினர் நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர் என்பது அவர்கள் வெளியிட்டுள்ள கருத்தின் மூலம் புலப்படுகின்றது.

- மீண்டும் சமாதானப் பேச்சுக்கான சூழல் உருவாகி வருவதை ஒரு நம்பிக்கையான நல்ல சகுனம் என வர்ணித்துள்ள நோர்வே ஆனால்இது உடனடியாக நாளையோ, மறுவாரமோ, சில வாரங்களிலோ ஆரம்பமாகும் என்று கூறிவிட முடியாது இது மிகவும் சிக்கலானதும் பல பிரச்சினைகளைக் கடந்து செல்லவேண்டியதுமான பாதையைக் கடந்தே மேற்கொள்ள வேண்டியுள்ளது - இவ்வாறான கருத்து தொனிக்க நோர்வே தரப்பில் இருந்து வெளியான செய்தியானது வேறு பல செய்திகளை அழுத்தமாகத் தெரிவிப்பதாகவே உள்ளது.

முதலில் மீண்டும் சமாதாமான முயற்சிகளை நோர்வே அரசின் அநுசரணையுடன் விடுதலைப்புலிகளுடன் மட்டும் பேசுவதன் மூலம் ஆரம்பிக்கும் நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் அவரது கட்சியினரும், கூட்டுக்கட்சியினரும் தெளிவாகவும், உறுதியாகவும் மட்டுமல்ல விசுவாசமாகவும், நேர்மையாகவும் கூடவுள்ளனர் என்பதை நோர்வே எந்தவித சந்தேகமுமின்றி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

பேச்சுவார்ததைகளை இலங்கை தவிர்ந்த வெளிநாடு ஒன்றில் மட்டுமே மேற்கொள்ள முடியும் என்ற விடுதலைப் புலிகளின் நியாயமான கோரிக்கைக்கு அரசை இணங்க வைக்க வேண்டும்.

ஏற்கனவே, தடைப்பட்டு நின்ற இடத்திலிருந்து - இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக விடுதலைப்புலிகள் கையளித்த யோசனைகளின் அடியொற்றி பேச்சுக்களை ஆரம்பிக்க அரசு தரப்பை சம்மதிக்க வைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இன்று ஆட்சியில் அமர்ந்துள்ள அரசு தன்னால் அரசியல் சுயநல அபிலாஷைகளுக்காக தேர்தல் காலத்தில் முன்வைத்த பேரினவாத சிந்தனையுடன் கூடிய நோர்வே அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கருத்துக்களை இனிமேலும் கூறாதிருப்பதுடன் சமாதான விரோதிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் அரசாங்கத்தை தூண்டவேண்டும்.

இவையாவும் செய்து முடிக்கப்பட்டால் மட்டுமே புதிய சமாதான முயற்சிகளின் ஆரம்பம் நம்பிக்கை தருவதாக இருக்கும். ஆனால் இவற்றை முழுமையாக செய்து முடிப்பதென்பது நோர்வேக்குச் சுலபமானதாக இருக்கப் போவதில்லை.


இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு முழுமையான சமாதான விருப்பார்வத்துடன் பேச்சுவார்த்தை மேசைக்கு அரசு வருவதென்பது அதற்கு இலகுவாக இருக்கப் போவதுமில்லை.

ஆகவே, பேச்சுவார்த்தை தொடர்பான பலசுற்றுப் பேச்சுக்களை இரு தரப்பினருடனும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் நோர்வேக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கப் போகின்றது.

எனவேதான் நோர்வே ஏற்பாட்டாளர்கள் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பம் அவ்வளவு சுலபமானதாக இருக்கப் போவதில்லை என்று முன்கூட்டியே தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

இன்றைய சூழலில் அரசாங்கம் என்ன முடிவை எடுக்கப்போகின்றது என்பதைப் பொறுத்தே சமாதான முயற்சிகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்பது தெளிவாகியுள்ளது.

## நாடும் நடப்பும்




# 200 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத் தொகுதி!

யாழ். மாவட்ட நீதிமன்ற கட்டடம் 200 மில்லியன் ரூபா செலவில் மீண்டும் முன்பு இருந்த இடத்தில் புதிதாகக் கட்டப்படவுள்ளது.

இந்தக் கட்டடப்பணிகளை கொழும்பைத் தலைமை அலுவலகமாகக்கொண்டு இயங்கும் சிரா நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கட்டுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் கடந்த சில நாட்களாக சிரா நிறுவனப் பணியாளர்கள் அந்தப் பகுதியில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்த நீதிமன்றக் கட்டடம் - நான்கு மாடிகளைக் கொண்டதாக அமையவுள்ளது. இந்தக் கட்டடப் பணிகள் முடிவடைவதற்கு சுமார் 20 மாதங்கள் எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இடிந்த நிலையிலுள்ள நீதிமன்றக் கட்டடத்தினை முற்றாக அகற்றிவிட்டுப் புதிதாக அத்திவாரம் இட்டு, கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கட்டடப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அடிக்கல் நாட்டும் வைபவம் விரைவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (தீ)

-நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில்-

## ஏழு வீதிகளைத் திருத்துவதற்கு 31 லட்சம் ரூபா நிதியொதுக்கீடு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட ஏழு வீதிகளைத் திருத்துவதற்கு 31 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் திட்டமிடப்பட்ட ஒழுங்கைகள் மற்றும் உப வீதிகள் புனரமைக்கும் பணிகள் முடிவுற்று வரும் நிலையிலேயே இந்தப்புதிய பணிகள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

கல்வியங்காடு, கொக்குவில், கோண்டாவில் உள்ளிட்ட பகுதியில் உள்ள 7 வீதிகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வீதிகள் புனரமைக்கும் பணிகள் படிப்படியாக பூர்த்தியாக்கப்பட்டு சிறந்த போக்குவரத்து வசதியை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

நல்லூர் பிரதேசச் செயலர் பிரிவின் கீழ் உள்ள திருநெல்வேலிச் சந்தைப் பகுதி புனரமைப்பதற்கும், புதிய கட்டடங்களை நிறுவுவதற்கும் 2 மில்லியன் ரூபாவரை ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனைவிட இச்சந்தைப்பகுதி மக்களின் பாவனைக்கு தேவையான நீர்விநியோகத்தை வளங்கும் முகமாக பாரிய நீர்த்தொட்டி ஒன்றினை அமைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ப)

—யாழ்.குடாநாட்டில்—

## கடந்த வருடத்தை விட எரிபொருள் பாவனை அதிகரிப்பு

வடபகுதியில் எரிபொருள் பாவனை சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என வட பகுதிக்கான பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய அலுவலக புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு எரிபொருளின் பாவனை அளவு அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் வாகனங்கள் அதிகரித்தமையும், பிரயாணத்தூரங்கள் அதிகரித்தமையும் ஆகும்.

கடந்த வருடம் 7,873,863 லீற்றர் பெற்றோலும், 36,385,114 லீற்றர் டீசலும், 10,131,000 லீற்றர் சுப்ப டீசலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த டிசம்பர் மாத காலப்பகுதியிலேயே 80 லட்சம் லீற்றருக்கும் அதிகமான பெற்றோல் பாவனை இடம்பெற்றுள்ளது. சுமாராக ஒருநாளில் 33 ஆயிரம் லீற்றர் பெற்றோல் பயன்படுத்தப்படுகின்றது. நாளொன்றிற்கு கொழும்பில் இருந்து பெற்றோல் பவுசர்கள் வடபகுதி நோக்கி வருகிறது. ஒரு பவுசர் 33 ஆயிரம்லீற்றர் பெற்றோல் கொள்ளளவு கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், முன்பு இருந்த பெற்றோல் பற்றாக்குறை குறைக்கப்பட்டு மக்கள் பாவனைக்குத் தேவையான பெற்றோல் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பாலம் உடைந்துள்ளதால் சாரதிகள், பயணிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியும், பருத்தித்துறை வீதியும் இணையும் வேம்படிச் சந்தியில் அமைந்துள்ள பாலம் உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

சில தினங்களுக்கு முன்பு பெய்த கடும் மழை காரணமாக மிகவும் மோசமான நிலையில் இந்தப் பாலம் பாதிக்கப்பட்டுள்ளமையால் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை வீதிப் பக்கமாகத் திரும்பும் வாகனங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

சில வாகனங்களின் சக்கரங்கள் உடைந்த பாலத்தினுள் பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக அந்தப் பாலம் மிகவும் பெரிதாக உடையக் கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இந்த உடைந்த பாலப்பகுதியால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துக்கள் ஏற்படும் வரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் பொறுத்திராது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (தீ)

## அரியாலைப் பகுதிக்கு சிவனேசன் எம்.பி.விஜயம்

(அரியாலை)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் கடந்த திங்களன்று அன்று அரியாலை காந்தி சனசமூக நிலையம், அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

அத்துடன், அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மக்களுக்கும் அரியாலை காந்தி சனசமூக நிலைய மக்களுக்கும் இடையே அண்மையில் ஏற்பட்ட கசப்புணர்வுகளைத் தீர்க்கும் வகையில் இரு பகுதி மக்களையும் தனித் தனியே சந்தித்து பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடியுமுள்ளார்.

இதற்கு முன் அரியாலை காந்தி சனசமூக நிலையத்தை அண்டியுள்ள மக்களுக்கும், நாயன்மார்கட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக இரு தரப்பிலும் ஏற்பட்ட பிணக்குகளை தீர்த்து வைக்கும் முகமாக இரு பகுதிகளுக்கும் அவர் சென்று மக்களுடன் கலந்துரையாடியுள்ளார். (55)

## திருத்தப்படாத கழிவு நீர் வாய்க்காலால் —போக்குவரத்துக்கு அபாயம்—

(உடுவில்)

சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள மீன் சந்தைக்கு முன்பாக வீதிக்கு குறுக்காகவுள்ள கழிவு நீர் வாய்க்கால் நீண்டகாலமாக கொங்கிறீட் மூடி இல்லாது திறந்த நிலையில் உள்ளது.

சுன்னாகம் மரக்கறிச் சந்தைக்கு வரும் பாரிய வாகனங்கள் திறந்த நிலையில் உள்ள வாய்க்காலை மிகச் சிரமப்பட்டே கடந்து செல்லவேண்டியுள்ளது. ஆட்டோ செலுத்துபவர்கள் ஓரளவு மூடப்பட்டுள்ள பகுதியால் செல்வதால் விபத் துக்கள் ஏற்பட இடமுண்டு அத்துடன், மீன் வாங்க செல்லும் வயோதிபர்கள் இப்பாதுகாப்பாற்ற வாய்க்காலில் கால் இடறி விழுவதும் நாளாந்தம் இடம்பெறுகிறது. இதிலிருந்து வீசும் துர்நாற்றம் இவ்விடத்தால் செல்வோரை வேதனைப்படுத் துகிறது.

வலி.தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்டதும், அருகிலேயே பிரதேச சபை காரியாலயம் அமைந்திருந்தும் இக்குறைபாட்டை உரியவர்கள் சீர் செய்யாதத்தையிட்டு நுகர்வோரும், வியாபாரிகளும் மிகுந்த வேதனை தெரிவிக்கின்றனர். (101)

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல்

## இரசாயனவியல் II

## மாதிரி வினாத்தாள்

5, (c) $NH_3$ ஆனது நீரிலும் சேதனத்திரவம் B இலும் கரையும். $NH_4Cl$ ஆனது நீரில் மட்டுமே கரையும். நீரும் B உம் கலக்குந்தகவற்றவை. 1.30 $moldm^{-3}$ $NH_4Cl$ இன் 100$cm^3$ நீர்க்கரைசலானது 100$cm^3$ B உடன் நன்கு குலுக்கி சமநிலை அடையவிடப்பட்டது. $25^0C$ இல் பெறப்பட்ட சமநிலையில் B இலுள்ள $NH_3$ இன் செறிவு $1 x 10^{-6}$ $moldm^{-3}$ ஆகும். இந்நிலையில் நீர்க்கரைசலின் $P^H = 4.585$ ஆகும். $25^0C$ இல் நீரின் அயன் பெருக்கம் $1 x 10^{-14}$ $mol^2 dm^{-6}$ பின்வருவனவற்றை கணிக்க?

(I) நீர்ப்படையில் ஐதரசன் அயன் செறிவு. ( நீரின் அயனாக்கத்தால் வரும் $H^+$ Iபுறக்கணிக்க)
(II) நீர்ப்படையில் சுயாதீன $NH_3$ இன் செறிவு
(III) நீருக்கும் B இற்குமிடையே $NH_3$ இன் பங்கீட்டு குணகம்.
(IV) $NH_4^+$ அயனின் நீர்ப்பகுப்பு மாறிலி
(V) $NH_3$ இன் அயனாக்க மாறிலி

6) (a) (i) $A_2B$ ஆனது, நீரில் அரிதாய் கரையும் திறனுள்ள அயனிக் சேர்வையாகும். $A_2B$ ன் A ஒரு வலுவளவுள்ள உலோகம். B ஓர் அலோகம். $A_2B$ திண்மத்திற்கும் நிரம்பிய நிலையில் நீரல் கரைந்துள்ள $A_2B$ கரைசலுக்கும் இடையேயான சமநிலை நிகழ்வுக்கு சமப்படுத்திய இரசாயனச்சமன்பாட்டை தருக.
இச்சமன்பாட்டைப்பயன்படுத்தி சமநிலை விதியில் இருந்து $A_2B$ ன் கரைதிறன் பெருக்கம் Ksp இற்குரிய கோவையை பெறுக?

(ii) $30^0C$ இல் $Ag_2CrO_4$ இனால் நிரம்பல் செய்யப்பட்ட 1 $l$ நீர்க்கரைசல் உள்ளது இதற்குள் 1.94g $K_2CrO_{4(S)}$ கரைக்கப்படுகிறது. இங்கு $K_2CrO_4$ கரைவதால் தோன்றும் $CrO_4^{2-}{}_{(aq)}$ செறிவுடன் ஒப்பிடுகையில் ஏற்கனவே நிரம்பிய நிலையில் உள்ள போதான $CrO_4^{2-}$ இன் செறிவை புறக்கணிக்கலாம் எனக்கொள்க. வீழ்படிவு தோன்றிய பின் கரைசலில் உள்ள $Ag^+$ இன் செறிவை காண்க?
( சா. அ . தி Ag = 108, K = 39, Cr = 52, O = 16 )
( $Ksp(Ag_2CrO_4) = 4 ´ 10^{-12} mol^3 dm^{-9}$ )

(III) மேற்படி பகுதி (II) இல் தோன்றிய வீழ்படிவின் திணிவை காண்க?

(b) $25^0C$ இல் பெறப்பட்ட பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
$E^q_{Mg^{2+}/Mg} = -2.370V$, $E^q_{Pb2+/Pb} = -0.126V$

(I) $25^0C$ இல் மேற்படி இரு மின்வாய்களும் உருவாக்கும். கலத்தின் மின் இயக்க விசையை காண்க?
(II) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.240V ஆவதற்கு $Pb^{2+}$ இன் செறிவுக்கு யாது நிகழ வேண்டும்?
(III) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.246V ஆக மாறுவதற்கு $Mg^{2+}$ இன் செறிவுக்கு யாது நிகழ வேண்டும்?
(IV) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.247V ஆக மாறுவதற்கு கலத்தின் வெப்பநிலைக்கு யாது நிகழ வேண்டும்?

(C) வெப்பநிலை $400^0C$ இல் வாயு அவத்தையில் பின்வரும் சமநிலை உண்டு.

$$2SO_{2(g)} + O_{2(g)} \rightleftharpoons 2SO_{3(g)}$$

கண்ணாடிக்குமிழ் ஒன்று $SO_2$, $O_2$ ஆகிய வாயுக்களை ஆரம்பத்தில் பகுதி அமுக்கங்கள் முறையே 2:1 ஆகுமாறு நிரப்பப்பட்டது. தொகுதி $400^0C$ இல் பேணப்பட்டது. ஊக்கியாக $V_2O_5$ திண்மமும் சிறிதளவு பயன்பட்டது. ( பரிசோதனை I ) சமநிலையில் $SO_2$ இன் மூல் பின்னம் $Xso_3 = 0.7$ ஆக காணப்பட்டது.

அதன் பின் தொகுதி $600^0C$ இற்கு வெப்பமேற்றப்பட்டது. இவ்வெப்பநிலையில் பெறப்பட்ட சமநிலையில் கலவையில் $SO_2$ இன் மூல் பின்னம் $Xso_2 = 0.4$ ஆக இருந்தது.

(I) $400^0C$ இன் சமநிலையில் $SO_2$, $O_2$ இன் மூல்பின்னங்களை காண்க?
(II) $400^0C$ இல் சமநிலைக்கு Kp இன் பெறுமதியை கணிக்கமுடியுமா? ஆம் எனில் கணிக்க? இல்லை எனில் காரணத்தை விளக்குக?
(III) $600^0C$ இல் சமநிலையில் $SO_3$, $O_2$ இன் மூல் பின்னங்களை கணிக்க?
(IV) $400^0C$ இலுள்ள Kp இலும் $600^0C$ இலுள்ள Kp பெறுமதி கூடுமா அல்லது குறையுமா?
(V) மேலுள்ள தரவுகள் கணிப்புக்களில் இருந்து இம்முற்தாக்கம் அகவெப்பத்தாக்கமா அல்லது. புறவெப்பத்தாக்கமா என்பதை காரணம் தந்து விமர்சிக்க.
(VI) வெப்பநிலை அதிகரிக்கப்படுகையில் வாயுக்கலவையின் அடர்த்திக்கு யாது நிகழும்?
(VII) வெப்பநிலை அதிகரிக்கப்படுகையில் வாயுக்கலவையின் சார் மூலக்கூற்றுத்திணிவிற்கு யாது நிகழும்?

7) (a) (I) நியம தோன்றல் வெப்பவுள்ளுறையை வரையறுக்க? சேர்வைகளின் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை அவற்றின் நியம உள்ளீட்டு சக்திக்கு சமன் என கொள்ளப்படுவதற்கான காரணம் யாது?

(III) பின்வரும் ஐந்து தாக்கங்களுக்குமான வெப்பவுள்ளுறை மாற்றங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து $H_2O_{2(aq)}$ இன் தோன்றல் வெப்பத்தை உள்ளீட்டு சக்தி முறையாலேயே காண்க?

I $SnCl_{2(aq)} + 2HCl_{(aq)} + H_2O_{2(aq)} \longrightarrow SnCl_{4(aq)} + 2H_2O_{(l)}$ $\Delta H = -372kJ$

II $SnCl_{2(aq)} + HCl_{(aq)} + HOCl_{(aq)} \longrightarrow SnCl_{4(aq)} + H_2O_{(l).}$ $\Delta H = -314kJ$

III $2HI_{(aq)} + HOCl_{(aq)} \longrightarrow I_{2(s)} + HCl_{(aq)} + H_2O_{(l)},$ $\Delta H = -215kJ$

IV $½ H_{2(g)} + ½ I_{2(s)} + aq \longrightarrow HI_{(aq)},$ $\Delta H = -55kJ$

V $H_{2(g)} + ½ O_{2(g)} \longrightarrow H_2O_{(l).}$ $\Delta H = -286kJ$

மேற்படி சக்தி மாற்றங்கள் தாக்கங்களில் குறிப்பிட்டுள்ள பீசமான மூல் எண்ணிக்கைகளில் தாக்கங்கள் நிகழும் போதானவை ஆகும்.

b) உமக்கு கீழ்வரும் வெப்ப இரசாயன தரவுகள் தரப்பட்டுள்ளன.
Mg(s) இன் நியம பதங்கமாதல் வெப்பவுள்ளுறை = 150kJ $mol^{-1}$
Mg(s) இன் நியம முதலாம் அயனாக்க வெப்பவுள்ளுறை = 738kJ $mol^{-1}$
$Cl_{2(g)}$ இன் நியம பிணைப்பு பிரிகை வெப்பவுள்ளுறை = 244kJ $mol^{-1}$
$Cl_{(g)}$ இன் நியம இலத்திரன் ஏற்றல் வெப்பவுள்ளுறை = -364 kJ $mol^{-1}$
$MgCl_{2(s)}$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை = -639 kJ $mol^{-1}$
$Mg^{2+}{}_{(g)}$ இன் நியம நீரேற்றல் வெப்பவுள்ளுறை = -1920 kJ $mol^{-1}$
$Cl^-{}_{(g)}$ இன் நியம நீரேற்றல் வெப்பவுள்ளுறை ` = -365 kJ $mol^{-1}$
$MgCl_{2(s)}$ இன் நியம மூலர் கரைசல் வெப்பவுள்ளுறை = -157kJ / $mol^{-1}$
ஒரேயொரு வெப்பவிரசாயனச் சக்கரம் மூலம் Mg இன் நியம இரண்டாம் அயனாக்கல் வெப்பவுள்ளுறையை காண்க?

(I) $O_{3(g)}$ ஆனது $NO_{(g)}$ உடன் ஒரு தனிப்படித் தாக்கத்தில் தாக்கம் புரிந்து $NO_{2\ (g)}$ IAk; $O_{2(g)}$ ஐயும் உண்டாக்குகின்றது. மேற்படி தாக்கம் சாத்தியமாவதற்காக உருவாக்கும். இடைநிலையையும், தாக்கிகள், விளைவுகள் ஆகியவற்றையும் குறித்துக்காட்டுவதற்கு சக்தி எதிர் தாக்கப்பாதை வரைபை வரைந்து குறிக்க?
(II) ஒரு இரசாயனத்தாக்கவீதத்தில் வெப்பநிலை அதிகரிக்க தாக்கவீதத்திற்கு யாது நிகழும் என இயன்றவரை பூரணமாகவும் தகுந்த வரைபின் உதவியுடனும் விளக்குக?
(III) ஒரு உலோகத்திற்கும் அமிலத்திற்கும் இடையே நிகழும் தாக்கத்தின் தாக்க வீதத்தை அமிலச்செறிவு எவ்வாறு பாதிக்கிறது என்பதை அறிவதற்காக குறித்த நீளம் (3cm) உடைய Mg நாடாக்கள் வித்தியாசமான செறிவுகளை உடைய மிகை HCl கரைசல்களுடன்தாக்க விடப்பட்டு ஒவ்வொன்றிலும் $27^0C$ இலும் 1 வளி மண்டல அமுக்கத்திலும் 10ml ஐதரசன் வாயு வெளியேறுவதற்கு எடுக்கும் நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| $[HCl_{(aq)}$ | $mol\ l^{-1}$ | 0.25 | 0.35 | 0.50 | 0.70 | 1.00 |
|---|---|---|---|---|---|---|
| நேரம் | Sec | 144 · | 72 | 36 | 18 | 9 |

a) HCl தொடர்பான தாக்க வரிசை யாது?
b) தாக்கத்தின் மொத்த வரிசை யாது?
c) இங்கு மிகை HCl பயன்படுவதன் நோக்கம் யாது?
d) இப்பரிசோதனையில் 1.0 mol $l^{-1}$ HCl ல் இருந்து 0.25mol $l^{-1}$ கரைசலை எவ்வாறு தயாரிப்பீர் என சுருக்கமாக கூறுக?

### பகுதி C - கட்டுரை

இரு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

8) (a) (I) மூலகம் X ஓர் முதல் வரிசை d - குழுவைச் சேர்ந்தது. இது பூச்சியம் தவிர ஒரே ஒரு ஒட்சியேற்ற எண்ணை மட்டுமே கொண்டிருப்பதோடு பரகாந்த இயல்பற்றது. இதன் முழு இலத்திரன் நிலையமைப்பையும் பிரதான சக்தி மட்ட ஒழுங்கிற்கமைய $1S^2, 2S^2$ ........... எனும் வடிவில் தருக.
(II) இதன் பூச்சியம் தவிர்ந்த மற்றைய ஒட்சியேற்ற எண் யாது?
(III) வினா (II) இலுள்ள ஒட்சியேற்ற எண்ணிலுள்ள குறிப்பிட்ட மூலக நீர்க்கரைசல் ஒன்றில் இருந்து அக்கற்றயனின் இருக்கையை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்?

(b) (I) பின்வரும் ஒவ்வொரு மூலக்கூறிலுள்ள ஒவ்வொரு அணுவின் ஆகவும் வெளியோட்டு வலுவளவு இலத்திரன்களின் ஒழுங்கமைப்பைக் காட்டுவதற்கு புள்ளி - புள்ளடி வரிப்படங்களை வரைக.
$ICl_3$, $S_2Cl_2$
(II) பின்வரும் இனங்கள் ஒவ்வொன்றினதும் வடிவங்களை கூறுக?
$ClO^-_3$, $IF_5$

(c) (I) **Pentaamminechlorocobalt( II ) Pentacyanonitrosylferrate( III )**
இனது IUPAC விதிகளுக்கமைந்த இரசாயனச் சூத்திரத்தை எழுதுக?
(II) பின்வரும் சூத்திரத்தை உடைய சேர்வைக்கு IUPAC முறைக்கமைய பெயரிடுக.
$Fe_2[ Fe(CN)_6 ]$

(d) உலோகம் M இனது கரையும் உப்பு ஒன்றுடன் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
(I) உப்பு நீரில் கரையும் போது ஒரு பச்சை நிறக்கரைசலைக் கொடுத்தது.
(II) உப்பின் நீர்க்கரைசலுக்கு மிகை $NH_3$ சேர்க்கப்பட்ட போது ஒரு கடும் நீலக்கரைசல் பெறப்பட்டது.
(III) மிகை செறி HCl இல் உப்பு கரைக்கப்பட்ட போது ஒரு மஞ்சள் கபிலக்கரைசல் பெறப்பட்டது.
(IV) (III) இன் விளைவை நீரினால் ஐதாக்கி $NH_3$ ஆல் காரப்படுத்த பச்சை வீழ்படிவை கொடுத்தது.
M ஐ இனங்காண்க.
அத்துடன் மேலுள்ள ஒவ்வொரு அவதானிப்புக்கும் பொருத்தமான இரசாயனச் சமன்பாடுகளையும் எழுதுக?

(e) $Pb^{2+}$, $Cu^{2+}$, $Sn^{2+}$ கற்றயன்கள் அடங்கிய கரைசல் ஒன்றில் இருந்து மூன்று கற்றயன்களையும் வேறாக்கும் முறை ஒன்றை தந்து $Pb^{2+}$, $Cu^{2+}$ I உறுதிப்படுத்தும். சோதனை ஒவ்வொன்றையும் தருக?

(f) $NH_3$ இல் மூலக்கூற்றிடை ஐதரசன் பிணைப்பு உண்டு. $I_2$ இல் மூலக்கூற்றிடை வந்தர்வால் கவர்ச்சி உண்டு. எனினும் அறை வெப்ப அமுக்கநிலையில் $NH_3$ வாயு அயடீன் திண்மம் இப்பௌதிக நிலை வேறுபாட்டை விளக்குக?

9) (a) (I) $I_2$ இன் தாழ்த்தும் தாக்கம்
(II) $I_2$ இன் ஒட்சியேற்றும் தாக்கம்
(III) $SO_3$ இன் ஒட்சியேற்றும் தாக்கம்
(IV) $SO_3$ இன் அமிலத்தாக்கம்
ஆகியஒவ்வொரு தொழிற்பாட்டையும் காட்டுவதற்கு ஒவ்வொரு சமப்படுத்திய சமன்பாடுதருக?

(b) (I) Nylon 6,6 எனும் பல்பகுதியத்தின் திரும்பத்திரும்ப வரும் அலகின் (repeat unit) கட்டமைப்பையும் இதன் ஒரு பகுதியங்களின் (monomers) கட்டமைப்புக்களையும் வரைக?
(II) புரதங்களில் மூலக்கூற்று நிறை குறைந்த புரதத்தின் திரும்பத்திரும்ப வரும் அலகின் கட்டமைப்பையும் அடிப்படை அலகின் கட்டமைப்பையும் அதன் IUPAC பெயரீட்டையும் தருக?
(III) மேற்படி நைலோனிலும் புரதத்திலும் காணப்படும் ஒரு பொதுக் கூட்டத்தின் பெயரைத் தருக?
(IV) இப்பொதுக்கூட்டம் இருப்பதை உறுதிப்படுத்தும் இரசாயனச் சோதனையையும் அவதானத்தையும் தருக?
(V) இப்பொதுக்கூட்டம் காணப்படும் இன்னொரு சேர்வையாது?

(C) மாணவன் ஒருவன் புவியோட்டில் காணப்படும் மக்னற்றைற் எனப்படும் இரும்பு ஒட்சைட்டில் 30g ஐ எடுத்து ஐதான $H_2SO_4$ இல் கரைத்து வடிதிரவத்தைப்பெற்று அதை 250 ml ற்கு ஐதாக்கி ஏகவின கரைசலை பெற்றுக்கொண்டான். இதில் 25ml ஐ நியமிக்க 0.1mol $dm^{-3}$, 20ml அமில $KMnO_4$ தேவைப்பட்டது. பின் புதிய 25ml கரைசலை எடுத்து தூய Fe ஐ மிகையாகச் சேர்த்து குலுக்கி வடித்து எஞ்சிய Fe அகற்றப்பட்டது. இதன் பின் இக்கரைசலை நியமிக்க 0.2mol $dm^{-3}$ 40ml அமில $KMnO_4$ தேவைப்பட்டது.
(I) $MnO^-_4$ ற்கும் இடையிலான அமில ஊடகத்தில் நிகழும் தாக்கத்தின் சமப்படுத்திய முழு அயன் தாக்கத்தை தருக?
(II) 25ml கரைசலில் உள்ள ஆரம்ப $Fe^{2+}$ மூல் யாது?
(III) 25ml கரைசலில் உள்ள முழு Fe இன் மூல் யாது?
(IV) 250ml கரைசலில் உள்ள ஆரம்ப $Fe^{2,}$ மூல் யாது?
(V) 250ml கரைசலில் உள்ள முழு Fe இன் மூல் யாது?
(VI) 250ml கரைசலில் உள்ள $Fe^{3+}$ மூல் யாது?
(VII) 30g உள்ள FeO ன் திணிவு யாது?
(VIII) 30g உள்ள $Fe_2O_3$ இன் திணிவு யாது?
(IX) 30g இல்உள்ள மொத்தஇரும்பு ஒட்சைட்டின் தூய்மையின் நூற்று வீதம் யாது?

10) (a) (I) பச்சை வீட்டு விளைவு என்றால் என்ன?
(II) பச்சை இல்ல வாயுக்கள் 4 தருக?
(b) (I) நீர் மாசடையும் தோற்றுவாய்கள் 5 தருக?
(II) நீர் மாசடைதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் 5 தருக?
(III) நீரின் நிலையில் வன்மைக்கு காரணமான பிரதான அயன் யாது?
(IV) நீரின் நிலையுள் வன்மைக்கு காரணமான இரு கற்றயன்கள் யாவை?
(V) நிலையின் வன்மையை அகற்றும் வழிமுறைகள் 2 தருக?
(VI) நிலையுள் வன்மையை அகற்றும் வழிமுறைகள் 4 தருக?
(V) டொலமைற்றின் 7.36g எடுக்கப்பட்டு மாறா நிறை பெறப்படும் வரை நன்றாக வெப்பமேற்றிய போது வெளிவந்த $CO_2$ வாயுவின் கனவளவு நியம வெப்ப அமுக்கத்தில் 1.792 $l$ ஆகக் காணப்பட்டது., எஞ்சிய மீதி 2mol $dm^{-3}$ 100$cm^3$ HCl உடன் தாக்க விடப்பட்டது. எஞ்சிய HCl 1mol $dm^{-3}$ NaOH இனால் நடுநிலையாக்கப்பட்டது. ( சா. அ. தி ) Ca = 40, Mg = 24, O =16 )
பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
(I) $CaCO_3$,, $MgCO_3$ இன் தனித்தனித்திணிவுகளை காண்க.
(II) இறுதி நியமிப்புக்கு தேவைப்பட்ட NaOH இன் கனவளவை காண்க?

K.சிவத்திரன் B.sc (Hons) ஆசிரியர் யாழ்.இந்துமகளிர் கல்லூரி

# ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல் அமெரிக்க படைவீரர் உட்பட 7 பேர் பலி!



(பாக்தாத்)

ஈராக்கில் அமெரிக்க நிர்வாகிகளின் காரியாலயமொன்றின் முன்னால் நடைபெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில், 6 ஈராக்கியர்களும் அமெரிக்கப் படையினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். கூட்டுப் படையினரை குறியாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் உட்பட பல ஈராக்கியப் பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இரு படையினரின் நிலை மோசமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் மற்றுமொரு குண்டுத்தாக்குதல் பாக்தாத்தின் மத்திய பகுதியில் நடத்தப்பட்டுள்ளது. வர்த்தக மையமொன்றில் நடைபெற்ற இந்தக் குண்டுத் தாக்குதலில் கட்டடங்களின் கண்ணாடிகள் வெடித்துச் சிதறியதாகவும் இரு ஈராக்கியர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பகுபாவில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் குர்திஷ்தான் தேசப்பற்றாளர் ஒன்றியத் தலைமைக் காரியாலயம் சேதமாக்கப்பட்டுள்ளது. சோதனைக்காக தலைமைக் காரியாலத்தின் முன் நிறுத்தப்பட்டிருந்த பஸ் வண்டிகளில் இருந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் பின் வானம் புகைமண்டலமாக காட்சியளித்தது. பத்திற்கும் மேற்பட்ட கார்களும் சேதமடைந்துள்ளன.

### ஜோர்ஜிய ஜனாதிபதியால்

# அஜரிய மாநில புரட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

கடந்த பத்துவருடங்களாக ஜோர்ஜியாவின் மாநிலமான அஜரியாவின் ஆட்சி அதிகாரத்தில் இருந்த புரட்சித் தலைவர் அல்சான் அபெநீடியஸ்சை ஜோர்ஜிய ஜனாதிபதி மில்கெயில் பதவியிலிருந்து பலவந்தமாக நீக்கியுள்ளார்.


பதவியிலிருந்து நீக்கப்பட்ட புரட்சித்தலைவர் அல்சான் ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடததிய பின்னர் ஜோர்ஜியாவில் இருந்து வெளியேறி ரஷ்யத் தலைநகரான மொஸ்கோவிற்கு தனது குடும்பத்தினருடன் சென்றுள்ளார்.

ஜோர்ஜியாவில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற ஒருசில மாதங்களுக்குள் அஜரியா மாநிலம் ஜோர்ஜியாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நேற்று முன்தினம் போராளித் தலைவரின் பதவி விலகலை ஜோர்ஜிய ஜனாதிபதி மிக்கெயில் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.




### தாய்லாந்துப் பிரதமர் சின்வத்ரா

# கலவரம் நடந்த இடத்தை பார்வையிடச் சென்றார்!



தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சின்வத்ரா முஸ்லிம்கள் அதிகமாக வாழும் தென் மாகாணத்தில் நடந்த கலவரத்தின் விளைவுகளை நேற்றுப் பார்க்கச் சென்றுள்ளார்.

கடந்த வாரம் தாய்லாந்தில் பொலிஸ் நிலையம் ஒன்று தாக்கப்பட்டதன் விளைவாக 100 பேர் கொல்லப்பட்டனர். பிரதமர் தக்சின் இந்தச் சம்பவம் போதைப் பொருள் சம்பந்தப்பட்டது எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மூன்று மாகாணங்களைத் தாக்க ஒழுங்குகளைச் செய்த முஸ்லிம் ஆசிரியர் ஒருவரைக் கைது செய்யும்படி உத்தரவு இடப்பட்டுள்ளது.

இதேவேளை, நராதிவாற் என்ற மாகாணத்தில் நேற்றுமுன்தினம் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனால், அங்கு பதற்றநிலை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் தென்பகுதிக்கு 7 ஆயிரம் தாய்லாந்துப் படைவீரர்கள் அனுப்பப்படவுள்ளனர். அதில் 3 200 படைவீரர்கள் ஏற்கனவே சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பி.பி.ஸியின் கிறீஸ் கக்கு தமது கருத்தில் - பிரதமரின் விஜயம் அவ்வளவு விஷேசமானதல்ல எனவும், இதற்கு சம்பவம் நடந்த இடம் இந்த வருட ஜனவரியில் இருந்து இன்று வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றதெனத் தெரிவித்தார்.

பிரதமர் தக்சின் மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொள்கிறார். பட்டானி முஸ்லிம் பள்ளிவாசலில் கொல்லப்பட்ட 30 பேரின் கொலை தொடர்பாக சுதந்திர விசாரணைகளை நடத்துமாறும் கேட்டுள்ளார். இந்த 30 பேரும் மேற்படி பள்ளிவாசலில் தஞ்சம் கோரியிருந்தவேளை கொல்லப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஈராக் கைதிகள் துன்புறுத்தல் விவகாரம்

# அதிக அழுத்தங்களைச் சந்தித்து வரும் அமெரிக்க பாதுகாப்பு செயலர் ரம்ஸ் பீல்ட்



ஈராக்கிய கைதிகள் மீதான அமெரிக்கப் படையினரின் துஷ்பிரயோகங்கள், அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் மீது அதிக அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. ஈராக்கிய கைதிகள் அமெரிக்க படையினரால் துன்புறுத்தப்படுவது தொடர்பாக அண்மையில் பததிரிகையொன்றில் பிரசுரிக்கப்படட புகைப்படங்கள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கும், பாதுகாப்பு செயலர் ரம்ஸ் பீல்ட்டிற்கும் இடையே முறுகல் நிலையை தோற்றுவித்துள்ளது. பி.பி.சி.யின் வொஷிங்டன் செய்தியாளர் கருத்துத் தெரிவிக்கும் போது, ரம்ஸ் பீல்டைப் பதவியிலிருந்து விலகுமாறு அதிபர் புஷ் நிர்ப்பந்திக்கலாமென குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கப் பெண் படையினர் ஒருவரால் நிர்வாணமாக்கப்பட்ட ஈராக்கிய கைதி ஒருவரை கயிற்றினால், கட்டியிழுத்துச் செல்லும் காட்சி ஒன்றும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்கப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இரண்டாவது படத்தில், இறந்த ஈராக்கியர் ஒருவரின் உடலுக்கு அருகில் அமெரிக்க வீரர் ஒருவர் 'வெற்றி' என்ற சமிக்கையை தனது விரல்களினால், வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அராபிய தொலைக்காட்சியொன்றில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தோன்றி சிறைக் கைதிகள் தொடர்பாக அமெரிக்கப் படையினரின் செயற்பாடுகளுக்கு வெட்கப்படுவதாக தெரிவித்திருந்தார். இதன் பின்னரே இப்படங்கள் அமெரிக்கப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இதனிடையே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பலமுறை ஈராக்கிலுள்ள சிறைகளுக்கு விஜயம் மேற்கொண்டு கைதிகள் நடத்தப்படும் முறைகளை அறிந்திருந்த பின் அமெரிக்க அதிகாரிகளுக்கு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. மேலும் ஈராக்கிற்கான திட்டங்களை வகுப்பதில் அதிக அளவில் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் செயற்பட்டிருந்தார். இதனால் இந்தப் படங்கள் தொடர்பான தகவல்களை ரம்ஸ் பீல்ட் தன்னிடம் முன்னரே தெரிவிக்கவில்லை என அமெரிக்க அதிபர் முரண்பட்டுள்ளார். இது தொடர்பாக செனட் சபைகரு முன் இன்று ஆஜராகுமாறு ரம்ஸ் பீல்ட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### 400 சிறுவர்களுக்கு எச்.ஐ.வி. தொற்றவைத்த

# பல்கேரிய மருத்துவர் உட்பட 6 பேருக்கு லிபிய அரசு மரண தண்டனை விதித்தது!

400 சிறுவர்கள் எச்.ஐ.வி. வைரஸினால் பாதிக்கப்படுவதற்குக் காரணமாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட பல்கேரிய மருத்துவர் மற்றும் அவரது உதவியாளர்கள் 6 பேருக்கு லிபிய அரசு மரணதண்டனை விதித்துள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் லிபிய நகரான பங்காசியில் உள்ள சிறுவர் மருத்துவமனையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர்கள், குறிப்பிட்ட சிறுவர்கள் எயிட்ஸ் நோயாளிகளாவதற்குக் காரணமாக இருந்தபடியால் மரண தண்டனை வழங்கும்படி லிபிய அரசின் சட்டத்தரணி வலியுறுத்தினார்.

லிபிய அரசு வழக்கறிஞர்களால் சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை மறுதத இரு வைத்தியர்களும், ஐந்து தாதிமார்களும் தாம் பொலிஸாரால் மிக மோசமாகச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகவும், பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவர்களது மரண தண்டனை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பல்கேரிய அரசு, இந்தத் தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என்றும், இந்தத் தண்டனையை மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் கோரியுள்ளது.

இந்தத் தீர்ப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்க செயலர் கொலின்பவல் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதற்குத் தம்மாலான உதவியை அமெரிக்க அரசு மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அமெரிக்க சி.ஐ.ஏயினதும், இஸ்ரேலிய மொசாட்டினதும் கையாட்களாகச் செயற்பட்டார்கள் எனக் குற்றஞ்சாட்டிய லிபிய அதிபர் கேணல் கடாபி, பின்னர் அந்தக் கருத்தினை வாபஸ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையை வெளியிட்டவருக்கு எதிராக நடவடிக்கை

மனித உரிமைகளை ஐவரி கோஸ்ட் மீறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டிய அறிக்கையினை வெளியிட்டவர்களுக்கு எதிராக ஐவரி கோஸ்ட் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஐவரிக் கோஸ்டில் எதிர்க்கட்சியினால் நடத்தப்பட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட 120 பேர் அந்நாட்டுப் படையினரால் கொல்லப்பட்டமை ஒரு மனித உரிமை மீறல் என ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவதின்போது, 30 பேர் மட்டுமே இறந்ததாகவும், சர்வதேச ஊடகங்கள் இதைப் பெரிது படுத்தி சர்வதேச அரங்கில் ஐவரி கோஸ்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதாக ஐவரி கோஸ்டின் அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக ஐவரி கோஸ்டின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர் பிலிப்பி டயானாகோனி - மேற்படி வெளியிட்ட அறிக்கை தற்செயலாக இடம்பெற்ற ஒன்றல்ல என்றும் இது திட்டமிடப்பட்ட சதி எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் அறிக்கையானது நாட்டின் சமாதானத்தையும், ஒற்றுமையையும் பாதித்துள்ளது என்றும் இதன் பின்னணியில் பாதுகாப்புப் படையினரையும் ஜனாதிபதியையும் பிரிக்கும் நோக்கம் காணப்படுவதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்ட அறிக்கையை வெளியிட்ட பிரானஸ் வானொலி சர்வதேச நாடுகள் மத்தியில் ஐவரிக் கோஸ்ட் பற்றிய தப்பான அபிப்பிராயத்தை தோற்றுவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

### கலகத்தை கட்டுப்படுத்த தவறினாராம்

# பெரு உள்நாட்டு அமைச்சரை பதவி விலகக் கோரிக்கை

### அந்நாட்டு அமைச்சரவை விடுத்தது



பெரு நாட்டின் உள்துறை அமைச்சர் பெர்னாண்டோ ரொஷ்பிக்லியோசி பதவியில் இருந்து விலகிக்கொள்ளுமாறு அமைச்சரவையினால் கேட்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னரே இந்த முடிவு மேறகொள்ளப்பட்டிருந்தது. பெருவின் தென்பகுதியில் கலகக்காரர்களினால் நகரசபைத் தலைவர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார்.

மூன்று வாரங்கள் தொடர்ந்த ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த தவறியமை[illegible]ாகவே பதவி விலகுமாறு கேட்கப்பட்டிருந்தார். பெரு ஜனாதிபதி அலயன்றோ மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பதவியேற்றிருந்தார்.

உள்துறை அமைச்சர் பெர்னாண்டோவின் பதவி விலகல் பெரு ஜனாதிபதிக்கு பாதிப்பை ஏற்படுத்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 72 மணித்தியாலங்களில் பதவியிலிருந்து விலகுமாறும் கேட்கப்பட்டிருந்தார். இவரைப் பதவியில் இருந்து விலக்குவதற்கான காரணம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

பெருவின் தென்பகுதியில் 'ஜமரா' எனப்படும் பழ்ங்குடி மக்கள் ஆயிரக் கணக்கில் ஒன்றிணைந்து நகரசபைத் தலைவரை அடித்துக் கொன்றுள்ளனர். இவர் ஊழல்கள் புரிந்ததாக மக்கள் தெரிவித்திருந்தனர். ஆனால், இந்த மக்களின் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்ததாக உள்துறை அமைச்சர் காங்கிரஸில் தெரிவித்திருந்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான அறிகுறிகளை அடுத்து பங்குச் சந்தையில் வளர்ச்சி!

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதைத் தொடர்ந்து இலங்கைப் பங்குச் சந்தையில் வளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது.

இதன்படி கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் வீழ்ச்சியடைந்து சென்ற பங்குச் சந்தை இந்த மாதம் முதல் வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. இதற்கு நோர்வே அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணை மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளமை, அமெரிக்க அரசாங்கத்தின் சார்பான பிரதி நிதிகளின் வருகை போன்றவை காரணம் எனத் தெரியவருகிறது.

சமாதான முயற்சியில் மீண்டும் உருவாகியுள்ள நம்பிக்கையை அடுத்து மீண்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதுடன் வெளிநாட்டு முதலீடுகளும் அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளன.

இது மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் நாட்டில் ஏற்படும் சமாதான முயற்சி இலங்கையின் அபிவிருத்திக்கு பெரிதும் துணையாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இணக்கம் தெரிவித்துள்ளமை சர்வதேச ரீதியில் பெரும் வரவேற்பை இரு தரப்பினருக்கும் உருவாக்கியுள்ளது.

இதுவே, இந்தப் பங்குச் சந்தை வளர்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை 1221.27 ஆக இருந்த அனைத்துப் பங்குச் சந்தைகளின் குறிகாட்டி நேற்று 1226.87 புள்ளி ஆக அதிகரித்துள்ளது.

இதேபோல் மிலங்காப் பெறுமதி கடந்த திங்கட்கிழமை 1850.26 புள்ளி ஆக இருந்தது. நேற்று இது 1857.86 புள்ளி ஆக அதிகரித்திருந்தது. இதேபோல் நேற்றைய தினம் மொத்தப் பரிமாற்றுத் தொகையாக 199 மில்லியன் ரூபாய்கள் இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். (ப)

# ஜே.வி.பி தலைவர்கள் சந்திரிகாவுடன் பேச்சு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஜே.வி.பியினருக்கும் பேச்சுவார்த்தை நேற்று இடம்பெற்றது. நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் ஆரம்பமான இந்தச் சந்திபபு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் சுதந்திரக் கட்சி சார்பில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும், ஜே.வி.பி சார்பில் அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டதாக தெரியவருகிறது.

தற்போதைய அரசியல் நிலை, சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பு, சமாதான முயற்சியில் இந்திய ஆதரவைத் திரட்டல் கலைக்கப்பட்ட மாகாண சபைகளின் தேர்தலை எதிர்கொள்ளல் முதலான விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால சமாதான நடவடிக்கைகளின்போது, நோர்வே அரசினை விமர்சித்தல், ஜே.வி.பி தற்போது மௌனம் சாதிப்பது குறித்து மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயங்களை தோற்றுவிப்பதைத் தவிர்ப்பதற்காகவே இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

# பட்டதாரிகளுக்கான விண்ணப்பம் இன்றைய பத்திரிகையில் வெளியாகும்!

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம் இன்றைய பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்று நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்ததாக திவயின பத்திரிகைச் செய்தி வெளியிட்டது.

இந்த விண்ணப்பம் கடந்த முதலாம் திகதி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட இருந்தபோதிலும், பல்வேறு காரணங்களால் பிரசுரிக்கப்படாததனால் வேலையற்ற பட்டதாரிகள் மத்தியில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

பட்டதாரிகள் முன்னர் விண்ணப்பப் படிவம் பிரசுரிக்கப்படாததனால் கலவரமடையாது இருக்குமாறும், பத்திரிகைகளில் விண்ணப்பம் பிரசுரிக்கப்படும் என்றும், அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்தபடி வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கு திடசங்கற்பத்துடன் இருப்பதாகவும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இஸ்ரேலிய ஆயுதங்களை...

திற்கு முரணானது என எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

முன்னாள் அமைச்சர் செகவ் இலங்கை அரசுக்கு குறைந்த விலையில் ஆயுதங்களைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருப்பது குறித்தும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் விசனம் வெளியிட்டுள்ளது.

இவர் இவ்வாறு உறுதியளித்திருப்பது, இஸ்ரேலிய பாதுகாப்ப நிறுவனங்கள் முன்னர் கூடிய விலையில் ஆயுதங்களை விற்றதாகக் கருத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு மீது இலங்கை அரசு கொண்டிருந்த நம்பிக்கையை தகர்க்கும் வகையில் அமைந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளை சந்தித்து வந்தார். 2003 ஆம் ஆணடு மே மாதம் இலங்கை விமானப் படைத் தளபதிகளைச் சந்தித்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த ஆயுதவிற்பனை முயற்சி சட்டவிரோதமானது என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது. அந்த நாட்டின் பாதுகாப்பு அமைசசின் பேச்சாளர் ரசெல் அஸ்கெனால! இது குறித்து தகவல் வெளியிடுகையில்-

இலங்கைக்கு பாதுகாப்பு ஆயுதங்களை விற்க முனைவது தொடர்பாக செகவ்வுக்கு எச்சரிக்கை செய்துள்ளோம். அவரிடம் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு எந்த அனுமதிப் பததிரமும் கிடையாது.

இது குறித்து பூரண விசாரணை நடத்தப்பட்டு வருகின்றன எனவும்

# வன்னித் தேர்தலை ரத்துச் செய்யுமாறு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!

கடந்த பொதுத் தேர்தலின் போது வன்னி மாவட்டத்தில் பல தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்ற மோசடிகள் காரணமாக மக்கள் தங்கள் வாக்குகளை சுதந்திரமாக அளிக்கும் உரிமை இல்லாது போனதாகத் தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளரான கே.சிவனேசன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் ஆணையாளர் உட்பட 8 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் மத்திய நிலையங்களில் பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றதாகவும், இது தொடர்பாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மற்றும் ஏனைய தேர்தல் அதிகாரிகளிடம் தெரிவித்த போதிலும், அவர்கள் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்புக்காக மக்களுக்கு இருந்த சுதந்திரம் அற்றுப் போய்விட்டதாகவும், இது ஒரு அடிப்படை உரிமைமீறல் என நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் எனவும் மனுதாரர் தமது மனுவில் மேலும் கேட்டுள்ளார்.

## கூட்டமைப்பு...

இந்தப் பேச்சு ஆரம்பிக்குமாக இருந்தால் ஜே.வி.பி.எவ்வாறு செயற்படவுள்ளது என்பது தெரியவில்லை.

அத்துடன், இந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தால், அதனை ஜே.வி.பியினர் குழப்ப முனைவதுடன் பேச்சுவார்த்தை எவ்வளவு தூரம் நம்பிக்கையுடன் முன்னகர்த்தப்படும் என்பதும் தெரியவில்லை. எல்லாவற்றையம் உன்னிப்பாக அவதானிப்பதாகவும் ரணில் தெரிவித்தார்.

அத்துடன் பிரதி சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் யாரைப் போட்டியிட வைப்பதென்பது இன்னமும் முடிவுசெய்யவில்லையெனவும் ரணில் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுப் பகல் 2 மணியளவில் நாடாளுமன்றத்தில் வைத்து சபாநாயகர் லொக்கு பண்டாரவையும், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் கந்தப்பொலவில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றில் அரைநாள் விவாதம் நடத்த அனுமதி தருமாறு கூட்ட

# கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் பதிவுசெய்ய ஏற்பாடு!

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளை பதிவுசெய்யும் நடவடிக்கை எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

சரசவியற்திட்டத்தின் கீழ் இந்தப்பதிவுகளை மேற்கொள்ள வட மாகாண சரச சவிய அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தேசிய நிர்மாணிகள் சங்ககட்டடத்தில் (பிரதான தண்ணீர் தாங்கிக்கு அருகில்) இந்தப்பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இப்பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது பட்டதாரிகளின் பட்டத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழின் பிரதியை சமாதான நீதவானின் ஊடாக உறுதிப்படுத்தி ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# யார் விமர்சனம் செய்தாலும் வெளியுறவுக் கொள்கை மாறாது

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக - இந்தியா தெளிவானதொரு வெளியுறவுக் கொள்கையினை வைத்திருக்கிறது. இதுவே - இப்போது நடை

போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசு, வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு அதிக முன்னுரிமை வழங்குவது போல் தெரிகிறது.

ஆனால் - எவ்வாறான நடவடிக்

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு மீது இலங்கை அரசு கொண்டிருந்த நம்பிக்கையை தகர்க்கும் வகையில் அமைந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக செகவ்

செகவ்வுக்கு எச்சரிக்கை செய்துள்ளோம். அவரிடம் ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு எந்த அனுமதிப் பததிரமும் கிடையாது.

இது குறித்து பூரண விசாரணை நடத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவு

மே மாதம் 8 ஆம் நாள் 2004 சனிக்கிழமை பி.ப 3 மணி

**08.05.2004**

கைலாசபதி கலையரங்கம்

தலைமை : குழந்தை ம.சண்முகலிங்கம்
வரவேற்புரை : கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
நினைவுரை : 'கலையின் அன்பன் கலைஞரின் நண்பன் – வித்தி'
பேராசிரியர் : செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
நன்றியுரை : கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா

*அரங்க அளிக்கை*

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினரின்

கீசகன் வதை

(வடமோடி நாட்டுக்கூத்து)

*பேராசிரியர் - சு.வித்தியானந்தன், நினைவு அறக்கட்டளை.*

விளம்பர அன்பளிப்பு **பெஷன் ஹவுஸ்**

65, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

021-2222197

(சி-2504)


துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் கந்தப்பொலவில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி நாடாளுமன்றில் அரைநாள் விவாதம் நடத்த அனுமதி தருமாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு அவர் எதிர்வரும் 17 ஆம் திகதி கட்சித் தலைவர்களின் கூட்டம் நடக்கும்போது, விவாதத்திற்கு நேரம் ஒதுக்குவது குறித்து முடிவு எடுக்கலாம் எனவும் 18 ஆம் திகதி பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்று பின்னர் நேரமில்லையெனில் 19 ஆம் திகதி விவாதத்தை நடத்தலாம் எனவும் சபாநாயகர் தம்மிடம் தெரிவித்ததாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

சபாநாயகருடனான சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் மலையக மக்கள் முன்னணி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் மற்றும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பில்....

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - சம்பவம் நடந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் படையினர் வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக - இந்தியா தெளிவானதொரு வெளியுறவுக் கொள்கையினை வைத்திருக்கிறது. இதுவே - இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து விமர்சனம் செய்யதாலும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிவிட முடியாது என்று- இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென் தெரிவித்தார்.

பருத்தித்துறை ராமகிருஷ்ண மிஷனுக்கு நடமாடும் பஸ் நூலகம் ஒன்றைக் கையளிக்கும் போதே - நிருபம் சென் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பகுதிகளில் புனர்நிர்மாணம் செய்ய இந்திய அரசு பொருட்களையும், மானியங்களையும் வழங்க தயாராக உள்ளது.

இந்த உதவிகள், இலங்கை அரசு கேட்கும் போதே வழங்கப்படும். தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசு, வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு அதிக முன்னுரிமை வழங்குவது போல் தெரிகிறது.

ஆனால் - எவ்வாறான நடவடிக்கையை, அதாவது கட்டுமானப் பணியையா அல்லது பொருளாதார அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டா? இந்த உதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும். அதுவரைக்கும் இந்தியா பொறுத்திருக்கும்.

இந்தியாவின் செயற்பாடுகளை இலங்கைத் தமிழ் ஊடகங்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறது. இது தவறானது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை தொடர்பான ஒரு வெளியுறவுக் கொள்கை இருக்கிறது. அதுதான், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபற்றி யார் விமர்சனம் செய்தாலும் இந்தியாவின் கொள்கையை மாற்றிவிட முடியாது எனவும் குறிப்பிட்டார்.

## பாதுகாப்புச் செலவினம் 5 மில்லியனால் குறைப்பு!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புச் செலவைக் குறைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்திருப்பதாகத் நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் நாடாளுமன்றத்தில் - இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது 78 பில்லியன் ரூபா பாதுகாப்புச் செலவினம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டது.

## மீட்கப்பட்ட சடலம் ஆசிரியரது அல்லவாம்!

நெடுந்தீவுக் கடலில் காணாமற்போன ஆசிரியரின் சடலம் மீட்கப்பட்டதாக நேற்று வெளியான செய்தி தவறானதாகும்.

புங்குடுதீவில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சடலம் காணாமற்போன நபரினது சடலம் அல்ல என உறவினர்கள் தெரிவித்தனர். இதனால், மேற்படி நபரின் குடும்பத்தாருக்கு ஏற்பட்ட மனத்தாக்கங்களுக்காக வருந்துகின்றோம்.


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.